வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 351 | பக்கங்கள் : 20



06

இந்திய அரசுடனான நல்லுறவு இலங்கைக்கு அத்தியாவசியம்!



09

அமெரிக்க, இந்திய நலன்களை திருப்திப்படுத்தவா சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம்?



11

போர்க் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மனவலியை காட்டும் தொடர்



13

ஷூவே எங்கே...?

# எம்மைவிட்டு பிரிந்த ஆத்மாக்களுக்கு வாழும் இடங்களில் விளக்கேற்றுவோம்!



## தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 21

எம்மைவிட்டுப் பிரிந்த ஆத்மாக்களை நினைவு கூரும் முகமாக அமைதியாக எம் வாழுமிடங்களில், நம் இதயங்களில் விளக்கேற்றி ஆத்ம கடன் நிறைவேற்றுவோம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

19

## 725 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, நவ. 21

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 725 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோ

19

## பிரபாவின் பிறந்தநாளும் கொண்டாடவேண்டாம்!

### அரியநேத்திரனுக்கு தடை உத்தரவு

மட்டக்களப்பு, நவ. 21

எதிர்வரும் நவம்பர் 26 ஆம் திகதி , தமிழீழ விடுதலை புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்தநாள் விழாவை அனுஷ்டிப்பதோ,

19

## நிதியமைச்சர் பதவி வகிக்க பஸிலுக்கு தகுதி கிடையாது

### விஜயதாஸ எம்.பி கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் போன்று நிதியமைச்சர் பதவியையும் வகிக்க பஸில் ராஜபக்ஷவுக்கு எந்த உரிமையும் இல்லை என ஸ்ரீலங்கா

19

## கொரோனாத் தொற்றால் மேலும் 22 பேர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 21

நாட்டில் கொரோனாத் தொற்றால் மேலும் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்

19

## ஞானசார தேரரின் கூட்டத்துக்கு ஊடகங்களுக்கு அனுமதி மறுப்பு

வவுனியா, நவ. 21

ஒரே நாடு - ஒரே சட்டத்தின் செயலணித் தலைவர் ஞானசார தேரர் வடக்கில் முதலாவதாக நடத்திய கூட்டத்தில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

19

## கிளிநொச்சியில் ஒருவர் கொரோனாவால் மரணம்!

கிளிநொச்சி, நவ. 21

கிளிநொச்சியில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

19

## யாழில் அஜித் நிவாட்



யாழ்ப்பாணம், நவ. 21

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் நேற்று யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டார்.

இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கியா

19

## கிளாலியில் வன்முறை கும்பல் அட்டகாசம் தனித்து நின்று விரட்டியடித்த குடும்பஸ்தர்

யாழ்ப்பாணம், நவ. 21

கிளாலிப் பகுதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த வாள்வெட்டுக் கும்பலை குடும்பஸ்தர் தனித்து நின்று வீட்டில் இருந்த கத்தி மற்றும் மிளகாய்த்தூள் துணையுடன் விரட்டி அடித்துள்ளார்.

கிளாலிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவருவதாவது,

குறித்த பகுதியில் உள்ள வீடொன்றினுள் அதிகாலை 2 மணியளவில் வாள்கள், கைக்கோடரிகள் உள்ளிட்ட கூரிய ஆயுதங்களுடன் 10 க்கும் மேற்பட்டவர்கள் அடங்கிய கும்பல்

19




**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# DAN CINE MARATHON

## மாபெரும் குறும்படப் போட்டி

**இது நமது திரைத்துறை**
**கலைஞர்களுக்கான சந்தர்ப்பம்**

**உங்கள் அணியினருடன் போட்டியில்**
**கலந்துகொள்ளத் தயாராகுங்கள்**

**Dan Cine Marathon குறும்படப் போட்டியில் பங்குபற்றவிரும்பும் அணிகள் இப்போதே உங்கள் விவரங்களைப் பதிவு செய்து கொள்ளுங்கள்**

**தொடர்புகளுக்கு :**

**075 313 2901, 075 313 2932, 076 921 3686**


## பஸ் மோதி வயோதிபர் உயிரிழப்பு

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் வயோதிபர் ஒருவர் மீது மோதியதில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மாத்தளை, தம்புள்ளை பொலிஸ் பிரிவு ஹபரண வீதி, அவுடங்காவ பிரதேசத்தில் தம்புள்ளையிலிருந்து ஹபரண நோக்கிப் பயணித்த பஸ்ஸே, பாதசாரி மீது மோதியுள்ளது. இந்த விபத்தில் சிக்கி அடுவாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயது நபரே மரணமடைந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த குறித்த நபர், உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# மரண அறிவித்தல்

## திருமதி பூமாவதி தனிநாயகம்



**பிறப்பு - 23.04.1937 இறப்பு - 18.11.2021**

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் – 6ம் ஒழுங்கை, வேப்பங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இருமரபும் தூய கனகராய முதலிய வம்சம் திருமதி. பூமாவதி (பூமா) தனிநாயகம் கடந்த 18.11.2021 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அனலைதீவைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை – சுந்தரம் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற இராமநாதர் குமாரசாமி – பார்வதி குமாரசாமி தம்பதியினரின் பாசமிகு மருமகளும், தனிநாயகம் – நெடுந்தீவு ( இளைப்பாறிய உதவி ஆணையாளர், கமநல சேவைகள் திணைக்களம் ) அவர்களின் அன்பு மனைவியாரும், அமரர்கள் தில்லைநாயகம், திருமதி சொர்ணலட்சுமி சேதுகாவலர் மற்றும் சிவஞானம் (பிரான்ஸ்), திரு.சோதிநாதன் (கனடா), கமலாவதி (இலங்கை) தவநாயகி (இலங்கை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், திருமதி குணநிதி தில்லைநாயகம் (கனடா), அமரர் திரு.சேதுகாவலர், திருமதி. கமலம் சிவஞானம் (பிரான்ஸ்), திருமதி சொர்ணம் சோதிநாதன் (கனடா), அமரர்கள் சண்முகநாதன், திருமதி. சரஸ்வதி மாணிக்கவாசகர், திருமதி கண்மணி தியாகராஜா, அமரர்கள் திருமதி பூபதி வெற்றிவேல், சுப்பிரமணியம் குமாரசாமி மற்றும் திருமதி லோகநாயகி மனோகரன் ஆகியோரின் மைத்துனியும், மதிவதனி தமிழ்மாறன் (இங்கிலாந்து), சசிவதனி விசாகரட்ணம் (இங்கிலாந்து). அகிலவதனி தர்சன் (நியூசிலாந்து), லோகன் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், தமிழ்மாறன் (இங்கிலாந்து), விசாகரட்ணம் (இங்கிலாந்து), தர்சன் (நியூசிலாந்து) பாசமிகு மாமியாரும், அஷ்வினி, கவின், அமித்தா. விஷ்ணு, நவின், அனிக்கா ஆகியோரின் ஆருயிர் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று ( 21.11.2021) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வேப்பங்குளம் வவுனியாவில் உள்ள அவரது இல்லத்தில் ( இல 43, 6ம் ஒழுங்கை , மன்னார் வீத) நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.குடும்பத்தினர்.

**தொலைபேசி: 024 222 0515**
**அலைபேசி : +94 76 197 3124**
**+44 7459 957000**

தகவல் :
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



## திருமதி செல்வதேவி தேவதாஸ்

(இளைப்பாறிய ஆசிரியை, வட இந்து மகளிர் கல்லூரி, வரணி மகாவித்தியாலயம், அல்வாய் சிறிலங்கா வித்தியாலயம்)

**பிறப்பு - 10.01.1934 இறப்பு - 17.11.2021**

பருத்தித்துறை, புலோலி மேற்கு, ஆத்தியடியை பிறப்பிடமாகவும் தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்வதேவி தேவதாஸ் கடந்த 17.11.2020 புதன்கிழமை கனடா, ரொறன்ரோவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு விநாயகம்பிள்ளை, – செல்லம்மா தம்பதிகளின் அன்புமகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை கோபால், – இராசநாகரத்தினம் தம்பதிகளின் அன்புமருமகளும், தேவதாஸின் அன்பு மனைவியும், கோபி இரத்தினம், வத்சலா, கௌசல்யா, பிருந்தா மைதிலி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகிர்தகலா, பத்மநாதன், சிறிதரன், கேதீஸ்வரன் ஆகியாரின் அன்பு மாமியாரும், மகிசன், மயூரி, கஜன், சேரன், நித்தியா ஆகியோரின் பாசத்துக்குரிய பாட்டியும், காலஞ்சென்ற வேலாயுதம், சண்முகநாயகம், சரோஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், உலோகநாயகி, கலாமதி, காலஞ்சென்ற தில்லைநடேசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சந்திரமணி, காலஞ்சென்ற சங்கரதாஸ், வித்தியாசாகரம், தயாநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தொடர்புகளுக்கு :
**கோபி இரத்தினம் (மகன்) - 0044 7585978377**
**தேவதாஸ் (கணவர்) - 001 416 241 1697**
**வத்சலா பத்மநாதன (மகள்) - 001 647 880 2713**
**கௌசல்யா சிறீதரன் (மகள்) - 001 416 804 2615**
**பிருந்தா மைதிலி கேதீஸ்வரன் (மகள்) - 0033 634 274 237**

தகவல் :
**கோபி இரத்தினம் (மகன்)**

## வடமாகாண மரநடுகை மாதம் 21 கார்த்திகை 2021

**“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப் பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை”**

**- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர்)**

## 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை

கல்வி TV CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## 21.11.2021 ஞாயிற்றுக்கிழமை

கல்வி TV CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
21.11.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## இதுபற்றி சிந்திக்க முடிந்தால்!

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் - மருத்துவ பரிசோதனைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். மருத்துவ சோதனைக்காக அவர் சில மணித்தியாலங்கள் மயக்க நிலையில் இருந்தார். இந்த மிகவும் சொற்ப நேரத்தில் அவரது அதிகாரங்கள் அனைத்தும் துணை ஜனாதிபதி கமலா ஹறிசிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ஒரு வேளை, ஜனாதிபதிக்கு ஏதாவது நடந்தால், உடனடியாகவே துனை ஜனாதிபதி, உத்தியோகபூர்வ ஜனாதிபதியாகிவிடுவார். இது அமெரிக்க சட்டமாகும்.

அதேபோன்று, ஜனாதிபதியாக இருப்பவர் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும். இதுவும் அமெரிக்காவில் கட்டாயமான ஒன்று. ஏன் அப்படி? நல்ல உடல் ஆரோக்கியத்துடன் இருப்பவரால்தான் - நல்ல மனநிலையில் இருக்க முடியும் - நல்ல மனநிலையில் இருப்பவரால்தான் நிதானமாக சிந்திக்க முடியும். நிதானமாக சிந்திப்பவரால்தான் - மக்களுக்கும் நாட்டுக்கும் பயனுள்ள நல்ல முடிவுகளை எடுக்க முடியும். இந்த அடிப்படையில்தான், அமெரிக்க ஜனாதிபதியாக இருப்பவரின் ஆரோக்கியம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இது அமெரிக்கா தொடர்பான விடயம் மட்டுமல்ல. இது நமது அரசியலுடன் தொடர்பானது. இதற்கு நமக்கு தெரிந்த மகாபாரதக் கதையையே எடுத்துக் கொள்ளலாம். அஸ்தினாபுரத்தின் அரசானான திருதராஷ்டிரன் பிறவியிலேயே கண் தெரியாதவர். கண்தெரியாத ஒருவரால் மற்றவர்களின் உடல் மொழியை, உதட்டசைவுகளை, அந்த அசைவுகளில் தெரியும் நயவஞ்சக அரசியலை ஒரு போதுமே தெரிந்துகொள்ள முடியாது. அவ்வாறான ஒருவர் தலைவனாக இருந்தால் என்ன நடக்குமென்பதுதான் மகாபாரதக் கதை. திருதராஷ்டிரனின் ஆளுகை குறைபாட்டால் - இறுதியில், அஸ்தினாபுரமே அழிந்து போனது. இது கதை - ஆனால், அற்புதமான அரசியல் போதைனை. இதனால்தான் இப்போதும் - இந்திய இராஜதந்திரத்தில், மகாபாரத போதனைகள் முக்கிய இடத்தை பிடித்திருக்கின்றன.

பொதுவாக மக்களை வழிநடத்தும் பொறுப்பு வாய்ந்த அரசியல் பதவிநிலைகளில் - குறிப்பாக தலைவர்களாக இருப்பவர்கள், நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது கட்டாயமான ஒன்று. ஆனால், நமது தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் அனைத்துமே தலைகீழாகவே நடப்பதுண்டு. அரசாங்கப் பதவிகளில் இருந்து, 60 வயதில் ஓய்வுபெற்ற பின்னர்தான், பலருக்கும் (இப்போது 65) தமிழ்த் தேசிய (தேர்தல் அரசியல்) அரசியல் ஆசை வருகின்றது. ஐம்பதிலும் ஆசை வரும் என்பது போல் - இது, 60இல் 65 இல் வருகின்ற ஆசை. இவ்வாறானவர்களுக்கு ஆசனங்கள் கொடுப்பதற்கு கட்சிகளும் பின்நிற்பதில்லை. ஒய்வு பெற்றவர்களை தேடியலைந்து, தேர்தலில் நிறுத்தும் அதிசயங்களும், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில்தான அதிகம் நடப்பதுண்டு. அதாவது, அரசாங்கத்தில் இனியும் வேலை செய்ய முடியாதென்னும் நிலையில் ஓய்வுபெறுபவர்கள் தான், தமிழ்த் தேசியத்தை காப்பாற்ற வருகின்றனர்! இவர்களால் எப்படி தமிழ் தேசியத்தை காப்பாற்ற முடியும்? இதற்கான பதிலை மக்கள்தான் தேடவேண்டும்!

இது ஒரு பிரச்சினையென்றால் - அடுத்தது, அரசியலில் மூப்படைதல் தொடர்பானது. மூப்படைதல் மனித வாழ்வில் நடக்கும் ஒன்று. மூப்படைந்து, முற்றிலும் இயலாதென்னும் நிலையில் மனிதர்களுக்கு தேவையானது ஓய்வு மட்டுமே! ஆனால் ஒய்வெடுக்க வேண்டியவர்கள் அரசியலை கையாளும் போது, அந்த அரசியலுக்கு என்ன நடக்கும்? அந்த அரசியலை நம்பியிருக்கும் மக்களுக்கு என்ன நடக்கும்?

அரசியலை இயங்குநிலையில் வைத்திருப்பதற்கும் - புத்தாக்கம்மிக்க செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், இளைய தலைமுறையினரின் பங்குபற்றல் கட்டாயமான ஒன்று. அதற்காக மூத்தவர்களை முற்றிலுமாக நிராகரிக்க வேண்டும் என்பதல்ல விடயம். மூத்தவர்களும், அவர்களது அனுபவங்களை கற்றுக் கொண்டு, முன்நகர வேண்டிய - ஒரு இளைய தலைமுறையும், சம நிலையில் செயலாற்றும் போதுதான் - குறித்த அரசியலானது, அதன் இலக்கு நோக்கி உயிர்ப்பாக இருக்க முடியும். ஆனால் தமிழ்ச் சூழலிலோ - வாழ்நாள் முழுவதும் பதவிநிலை அரசியல் தலைவர்களாக இருக்க வேண்டுமென்றே சிலர் ஆசைப்படுகின்றனர். இதனால் அவர்களுக்கு நல்ல மகிழ்ச்சியும் நல்ல வாழ்வும் கிடைக்கலாம் ஆனால் - மக்களுக்கு?

இன்று சம்பந்தனுக்கு பின்னர் கூட்டமைப்பிற்கு என்ன நடக்குமென்னும் கேள்வியுடன்தான் கூட்டமைப்பின் எதிர்காலம் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இதற்கு என்ன காரணம்? புதியவர்களை உள்வாங்கி கட்சி வழிநடத்தப்படவில்லை. இதனால்தான் குறித்த ஒருவர் இல்லாவிட்டால், அந்த கட்சிக்கு என்ன நடக்குமென்னும் கேள்வி எழுகின்றது. இதே நிலைதான் தமிழரசு கட்சிக்கும். இந்த பிரச்னைக்கான வேர் காரணம் வேறு. அதாவது, வாழ்நாள் முழுவதும் தான் மட்டுமே பதவிநிலைகளில் இருக்க வேண்டுமென்னும், வாழ்நாள் தலைவர் ஆசைதான், இந்த தலைமைத்துவ வெற்றிடத்திற்கான அடிப்படையான காரணம். திருதராஷ்டிர மனநிலையிலிருந்து நமது தலைவர்கள் சிலர் வெளியேற வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் அவர்களை வெளியேற்ற வேண்டும்.

# அகவை 90 இல் குழந்தை ம.சண்முகலிங்கம்

உலகானந்தன்



"அரங்க நிகழ்வு என்பது ஒரு அனுபவம். எமது அந்தரங்க அனுபவங்களையே அரங்கம் பிரதிபலிக்கின்றது. உணர்ச்சிகளை வெளிக்கொணர்ந்து எமது மனச்சுமைகளை இலேசுபடுத்துகின்றபொழுதுதான் நாடகம் அதன் பணியிலே வெற்றியீட்டுகின்றது" என அருஸ்ரோட்டில் ஒரிடத்திலே குறிப்பிட்டிருக்கிறார். அதனை நிரூபிக்கின்றவகையில் 1980 தொட்டு 2000 வரையிலான காலப்பகுதியில் குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் எழுதி மேடையேற்றப்பட்ட நாடகள் அனைத்தும் அக்காலத்து ஈழத்து வாழ்வியலை வெளிக்கொணருவதாகவே காணப்பட்டன. அவை வெறும் நாடகங்களாக இல்லாமல் ஆவணங்களாகவும் இருக்கின்றன.

ஒரு நடிகராக, நாடகாசிரியராக,நெறியாளராக, தயாரிப்பாளராக, ஆய்வாளராக, நாடகப் போதனாசிரியராக, நாடகக் களப் பயிற்சியாளராக, விமர்சராக, உலக நாடக வரலாற்று ஆசிரியராக, மொழிபெயர்ப்பாளராக, நாடக அரங்குக் கல்லூரி நிறுவுநராக மட்டுமல்லாது கல்விசார் அரங்கினை பிரக்ஞைபூர்வமாக உருவாக்கியவர் என பல்பரிமாண பல்துறை ஆற்றல்களைக் கொண்டவரென அறியப்பட்ட குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களை 'ஈழத்து தமிழ் நவீன அரங்க வரலாற்றில் தாய்' என பேராசிரியர் க.சிவத்தம்பி போற்றியிருக்கிறார்.

அது மட்டுமல்லாது சண்முகலிங்கம் தனது நாடகங்களை ஒரு அரங்கியலாளனாகவே எழுதுகிறார். தாம் வாழுகின்ற, வளர்க்க விரும்புகின்ற ஓர் அரங்குக்கு அதன் வரையறைகளையும் சாத்தியப்பாடுகளையும் நன்கு அறிந்தவராய் நாடகவாக்கத்தைச் செய்கின்றார் எனவும் பேராசிரியர் சிவத்தம்பி ஓரிடத்திலே குறிப்பிட்டிருக்கிறார்.


நாடக ஆசிரியர் குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் அகவை 90 ஐ எட்டி நிற்கிறார். இன்றும் ஈழத்து நாடகக் கலைஞர்களைத் திறம்பட வழி நடத்துபவராகவும் காணப்படுகிறார். உலக நாடக அரங்க வரலாற்றை துறை போகக் கற்றறிந்ததோடு மட்டுமல்லாது உலக நாடக அரங்கியலின் சிறப்பம்சங்களையும் அது சார்ந்த உள்ளார்ந்த நுணுக்கங்களையும் உள்வாங்கிக் கொண்டதோடு அவற்றை மாணவர்களுக்குப் பிழையறக் கற்றுக் கொடுப்பவராகவும் காணப்படுகிறார். இவரது பெரும்பாலான நாடகங்கள் குழந்தைகளை மையப்படுதியதாக இருப்பதால்தான் இவரை குழந்தை ம. சண்முகலிங்கம் என அழைக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கைத்துறை தொடங்கக் காரணமானவர்களில் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் பங்கு அளப்பரியது. அத்துடன் அத்துறை ஆரம்பித்தபோது சில காலம் அதன் விரிவுரையாளராகவும் கடமையாற்றியிருக்கிறார் என்ற அவர் பற்றிய செய்தியானது அரங்கம் சார்ந்த அவரது ஆர்வத்தைக் காட்டுவதோடு அவரை ஒரு பொறுப்புள்ளவராகவும் நிரூபித்திருக்கிறது. இத்தகைய பெறுமதிமிக்க சேவைக்காக யாழ்.பல்கலைக் கழகம் அவரைக் கொண்டாடியிருக்க வேண்டும். மாறாக, அவரைப் பெறுமதி மிக்க கல்வியாளராகக் கண்ட கிழக்கு பல்கலைக் கழகம் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்திருக்கிறது.

1950 தொட்டு இற்றைவரை இடையறாது ஈழத்து நாடகத் துறைக்குப் பெருந்தொண்டாற்றிவரும் சண்முகலிங்கம் அவர்கள் இது வரை 150 மேற்பட்ட நாடகங்களை எழுதியிருக்கிறார். ஏனைய நாடகங்களோடு ஒப்பிடுகையில் போர்க்காலச் சூழலில் அவர் எழுதி மேடையேற்றப்பட்ட உளவியல் சார்ந்த நாடகங்கள் பெறுமதிமிக்கவை. அவைகளே மக்களை ஆற்றுப்படுத்தக் கூடியதெனவும் நம்பப்படுகிறது. அப்படிப்பட்ட நாடகங்கள் மக்களால் அதிகம் அறியப்படாதிருப்பது வருத்தத்துக்குரியது. இது ஈழத்து அரங்க வரலாற்றில் போர்க்கால உளவியல் சார்ந்த அறிவு வளர்சியடையவில்லை என்றதையே எடுத்துக் காட்டுகிறது.எனவே இது போன்ற அவரது படைப்புகள் பற்றிய அறிவை முழுமையாக வெளிக்கொண்டு வரவேண்டிய பொறுப்பு நாடகத்துறை சார்ந்தவர்களுக்கு உண்டு. இதுவும் அவரைப் பெருமைப்படுத்தக் கூடியதொரு பெருமுயற்சி என்று சொல்வதோடு இனிவருங்காலத்தில் நாடக அரங்கக் கலையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள ஆர்வமுடன் இருப்பவர்களுக்கு ஒரு முன்மாதிரியாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் இருக்கும் என்பதில் ஐயமில்லை.

சுருங்கச் சொன்னால் சிரமத்தைப் பாராது தற்போது காணப்படும் நவீன தொழில் நுட்பத்தினூடாக குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களது அனுபவங்கள் அனைத்தும் ஆவணமாக்கப்பட வேண்டும். இது ஒரு சேவை என்றதற்கு அப்பால் ஒரு தேவை என்றதை நாடக அரங்கக் கல்வித்துறை சார்ந்தவர்கள் உணர வேண்டும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்
## 21.11.2021 – 27.11.2021

நவம்பர்.21 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - கார்த்திகை 05

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | துவிதியை |

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

அரசாங்கத்தால் நன்மை உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கைக் காண்பீர்கள். பழைய சம்பவங்களை நினைவுபடுத்திப் மகிழும்படியான சூழல் அமையும். நீங்கள் எதிர்பார்த்த பணவரவு உண்டு. சொத்துக்கள் வாங்குவது, விற்பது பற்றிய செயல்பாடுகளில் ஆதாயம் பெறுவீர்கள். வாகன வகையில் எதிர்பார்த்த ஆதாயம் இல்லாவிட்டாலும் இழப்பு ஏற்படாது. சிலருக்கு கடன் பட வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படலாம். நெடுநாள் ஆசைகள் நிறைவேறும். படபடப்பு, பரபரப்பு இல்லாமல் அமைதியாக இருப்பது நல்லது.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணியிட மாற்றம், பணி உயர்வு, சம்பள உயர்வை எதிர்பார்க்கலாம். வெளிநாடுகளில் வேலை செய்பவர்களுக்கு முன்னேற்றமான சூழ்நிலை உண்டு. உயர்கல்விக்காக வெளிநாட்டில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பர். மனதில் ஏதோ ஒருவிதக் குறைபாடு இருந்து கொண்டே இருக்கும். பொருளாதாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். உற்சாக நிலையில் இருங்கள். உங்களின் கவுரவத்தை யாரிடமும் குறைத்துக் கொள்ள வேண்டாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நன்மை நடைபெறும். எந்த விஷயத்தில் ஈடுபட்டாலும் அடுத்தவரை நம்புவதில் எச்சரிக்கை தேவை. பிள்ளைகள் உங்களைப் பெருமிதப்படுத்துவார்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த பணவரவு இருக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவீர்கள். அலுவலகத்தில் பணிகள் திருப்திகரமாக நடந்து முடியும். எதிர்பார்த்த இடமாற்றம் வரலாம். குடும்பத்தினர், உறவினர்கள் அனுசரித்து செல்வர். கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம் ஏற்படலாம். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

எடுத்த முயற்சிகளில் வெற்றி உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டிகள் விலகும். தடைகள் அகலும். சிரமத்தை வருவது போல் இருக்குமே தவிர ஆனால் ஏற்படாது. மனதில் ஏற்படும் கவலையும், பயமும் கற்பனையானவையே. உங்களது பேச்சே உங்களுக்கு நன்மையை உண்டாக்கலாம். வீண் அலைச்சல் குறையும். ஆன்மிக எண்ணம் அதிகரிக்கும். எதிலும் வெற்றியே கிடைக்கும். நிதியுதவி கிடைக்கும். அலைச்சல் குறையும். பணியில் இருப்பவர்களுக்கு விருப்பம் இல்லாத மாற்றம் வரலாம்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் ஏற்படாதபடி கவனமாக செயல்படவும். கணவன், மனைவிக்கிடையே நிதானம் தேவை. பிள்ளைகளின் ஆரோக்கியத்தில் பொறுமை தேவை. உறவினர்கள், நண்பர்களிடம் பேசும்போது அவர்களை புண்படுத்தாதீர். பெண்களுக்கு மனக்கவலை நீங்கி நிம்மதி ஏற்படும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகமாகும். தீவிர முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். இத்தனை காலம் இருந்த கவலை நீங்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சொத்து விவகாரங்களில் இருந்த தாமதம் நீங்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

பணியிலும் குடும்பத்திலும் மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. வேலைப்பளு ஏற்பட்டாலும், எப்படியாவது செய்து முடித்து விடுவீர்கள். நெருங்கிய நண்பர்களிடம் இருந்த கருத்துவேறுபாடு நீங்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு இருக்கும். மற்றவர்களுடன் வாக்குவாதம் ஏற்பட்டாலும் உங்கள் பக்கம் உள்ள நியாயத்தை ஒப்புக் கொள்வார்கள். திடீர் பயணங்கள் செல்ல வேண்டி இருக்கும். மாணவர்கள் கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பது அவசியம்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முயற்சிக்கான பலன் கிடைப்பதில் தாமதம் உண்டாகும். வெளிநாட்டு வேலை வாய்ப்பு காத்திருப்போருக்கு நல்ல தகவல்கள் வந்து சேரும். திருமணம் தொடர்பான பேச்சுவார்த்தைகளை துவக்குவதற்கு இது ஏற்ற நேரம். தொழில் முயற்சிகள் வெற்றியடையும். பேச்சு, செயலில் கவர்ச்சி வெளிப்படும். ஒரு சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். ஆதாயம் பெறுவீர்கள். மனதில் இருந்த பயம் காணாமல் போகும். முயற்சிகள் வெற்றியடையும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

நண்பர்களுடன் ஒற்றுமை நன்றாக இருக்கும். நீங்கள் எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். பணியாளர்களுக்கு மன நிம்மதி கிடைக்கும்.புதிய வேலைவாய்ப்பு எதிர்நோக்கி இருப்பவர்கள் நல்ல தகவல் பெறுவார்கள். வெளிநாடு செல்வதற்கு முயற்சி செய்து கொண்டிருப்பவர்களுக்கு சற்று காலதாமதம் ஆனாலும் நல்ல தகவல்கள் கிடைக்கும். சகோதர சகோதரிகளுடன் மனத்தாபம் ஏற்படுவதைத் தவிர்ப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை நன்றாக இருக்கும். பணவரவு உண்டாகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

நண்பர்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பீர்கள். கணவன், மனைவிக்குள் கருத்துவேறுபாடு நீங்கி இணக்கம் உண்டாகும். பொருளாதார சிக்கல் தீரும். எதிர்ப்புகளை சமாளித்து முன்னேறுவீர்கள். முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சிலருக்கு கூடுதல் பொறுப்புகள் வரும். வருமானம் கூடும். குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளுக்காக பணம் செலவழிப்பீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மூத்த சகோதரர் உடல்நலத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு மனக்குழப்பம் நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். கூடுதலாக பொறுப்புகள் சேரும். பயம் ஒன்று நீங்கி நிம்மதி பிறக்கும். குடும்பத்தில் சந்தோஷம் தரும் சம்பவம் ஒன்று நிகழும். தடை, தாமதம் விலகும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். குறிப்பிட்ட விஷயம் ஒன்றில் தெளிவான முடிவு எடுக்க முடியாத குழப்பம் ஏற்பட்டு பின்னர் சரியாகும். பணியில் இருப்பவர்களுக்கு புதிய பதவி கிடைக்கலாம்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

அன்னிய மொழி பேசுபவர்களால் உதவி கிடைக்கும். அக்கம் பக்கத்தினர் மத்தியில் மதிப்பு உயரும். வாழ்வில் முன்னேற தேவையான வாய்ப்பு கிடைக்கும். தொழில், பணியிடத்தில் இருந்த போட்டிகள் விலகும். சுபநிகழ்வுகள் நடக்கும். பணியாளர்கள் உற்சாகமாக பணிகளை கவனித்தாலும், அலுவலக வேலைகளில் தாமதம் இருக்கும். புதிய வேலைக்கு முயற்சி செய்பவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். வாழ்க்கைத் துணையைப் புரிந்து கொண்டு சயல்படுவீர்கள். பிள்ளைகளின் செயல்பாடு பெருமை சேர்க்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். சொத்துக்கள் அல்லது நகைகள் வாங்குவது, விற்பது ஆகியவற்றில் கவனம் தேவை. பயணங்களின் போதும், வாகனங்களில் செல்லும் போதும் எச்சரிக்கை தேவை. சரியான நேரத்தில் உண்ண, உறங்க முடியாத சூழ்நிலை உண்டாகும். மற்றவர்களுக்கு வலியச் சென்று உதவி செய்து அவர்களின் ஆசியைப் பெறுவீர்கள். வேலைகளுக்காக அலைய வேண்டி இருக்கும். பேச்சில் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பணியில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் வழிகாட்டுதலை ஏற்பது நல்லது.

பகிர்வு - 4

# செல்வம் சேர்க்க வேண்டியதொன்றல்ல வந்து சேர வேண்டியதே!

கணபதி சர்வானந்தா

தமிழ் மறை என நாம் போற்றும் திருக்குறளில் செல்வம் எனப்படுவது என்ன? எனப் பல அத்தியாயங்களிலே விளக்கியிருக்கிறார் திருவள்ளுவர்.அதுமட்டுமல்ல வாழ்வியலுக்குத் தேவையான பலவற்றை அவர் எமக்காக எழுதித் தந்திருக்கிறார்.

இருந்தும் பிரபல தொழில் அதிபரான பில்கேட்ஸ் தனது தொழில் அனுபவத்திற்கூடாக அதனை விளக்கியிருப்பது சிறப்பு. அதனை ஒட்டி ஒரு முகநூல் பதிவு, சில திருத்தங்களுடனும், சில சேர்க்கைகளுடனும் வழமைபோல உங்களுக்காக...

சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்காவில் முதலீடு மற்றும் நிதி தொடர்பான மாநாட்டில் பேச்சாளர்களாகக் கலந்து கொண்டவர்களில் பில் கேட்ஸ்/ம் ஒருவர். கேள்வி பதில் நேரத்தின்போது அவரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. அது அங்குள்ள அனைவரையும் சிரிக்க வைத்த அதே நேரம் சிந்திக்க வைத்தது.

உலகின் மிகப் பெரிய பணக்காரரர் ஒருவர், தனது மகள் ஒரு ஏழை மனிதரைத் திருமணம் செய்து கொள்வதை ஏற்றுக்கொள்வாரா? முடியுமா? என்பதுதான் அக் கேள்வி.

ஏன் ஒரு பணக்காரரின் மகள் ஏழையைத் திருமணம் செய்யக் கூடாது? என்பதற்கு பில்கேட்ஸ் கொடுத்த விளக்கம் இதோ! அவருடைய பதில் பலருக்குள் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

ஒருவர், கொழுத்த வங்கிக் கணக்கை வைத்திருப்பதால் அவர் பணக்காரராகிவிட முடியாது. அவர் ஒரு செல்வந்தராகிவிமுடியாது என்பதை முதலில் புரிந்து கொள்ளுங்கள்..... எனத் தொடருகிறார் பில்கேட்ஸ்.

பணத்தை உருவாக்கும் திறனுள்ளவரே பணக்காரர் எனப்படுவர். உதாரணத்துக்குச் சொல்வ தானால் அதிர்ஷ்ட லாபச் சீட்டு (லொத்தர்) அல்லது சூதாட் டத்தில் வெற்றி பெற்ற ஒருவர் 100 மில்லியன் வைத்திருந்தாலும் அவரைப் பணக்காரர் என்றோ அல்லது செல்வந்தர் என்றோ சொல்ல முடியாது. அவர் அதிக பணத்தைக் கொண்ட ஒரு ஏழை என்றுதான் சொல்லலாம். அதனால்தான் 90வீதமான அதிர்ஷ்ட லாபச் சீட்டில் வென்ற கோடீஸ்வரர்கள் 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஏழை களாக மாறுகிறார்கள்.

அதே வேளை பணமில்லாத செல்வந்தர்களும் உங்கள் மத்தியில் இருக்கிறார்கள். உதாரணமாக,தொழில்முனைவோரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்களிடத்தில் பணம் இல்லாவிட்டாலும், ஏற்கனவே செல்வத்தின் பாதையில் இருக்கிறார்கள், ஏனென்றால் அவர்கள் தங்கள் நிதி நுண்ணறிவை வளர்த்துக் கொள்கிறார்கள், அதனால்தான் அவர்கள் செல்வந்தர்கள் என்றழைக்கப்படுகிறார்கள்.

பணக்காரர்களும் ஏழைகளும் எவ்வாறு வேறுபடுகிறார்கள்? என்றதற்கு அவர் தரும் விளக்கம். எளிமையாகச் சொல்வதென்றால் ஒருவன் தான் பணக்காரர் ஆவதற்காகத் தன்னையே அர்ப்பணிப்பார். அதே சமயம் ஏழை பணக்காரன் ஆவதற்காகப் பல தவறுகளைக் கூடச் செய்யலாம். புதிய பயிற்சியைப் பெற, புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ளத் தன்னைத் தொடர்ந்து மேம்படுத்திக் கொள்ள முயலும் இளைஞரைப் பார்த்தால், முதலில் அவர் பணக்காரர் என்பதை அறிந்து கொள்ளுங்கள். இது ஆருடம் அல்ல. இதுதான் உண்மை.

அனைத்துக்கும் அரசாங்கம்தான் பிரச்னை, பணக்காரர்களை எல்லாம் திருடர்கள் என்று நினைத்துத் தொடர்ந்து விமர்சித்து வரும் ஒரு இளைஞனைப் பார்த்தால், முதலில் அவன் ஒரு ஏழை என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஏனெனில் செல்வந்தர்கள் எப்பொழுதும் தங்களுக்குரிய தகவல்களைத் தேடுபவர்களாகவும், பயிற்சிகளைத் தொடர்பவர்களாகவும் . அவற்றின் தேவையை நம்புகிறவர்களாகவும் இருப்பர். ஆனால் ஏழைகள் மற்றவர்களை நம்பி இருப்பவர்களாகவும், அவர்கள் தமக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்று நினைப்பவர்களாகவும் இருப்பர்.

முடிவில், ஒரு பணக்காரனின் மகள் ஒரு ஏழையை மணக்க மாட்டாள் என்று நான் சொல்லுவதில் நான் பணத்தைப் பற்றிப் பேசவில்லை. அந்த மனிதனிடம் இருக்க வேண்டிய அதனை உருவாக்கும் திறனைப் பற்றியே பேசுகிறேன்.

இதைச் சொன்னதற்காக என்னை மன்னிக்கவும். பணம் தொடர்பான குற்றமிழைத்தவர்களில் பலர் ஏழைகளாகக் காணப்படுகிறார்கள். பணத்தின் முன் நிற்கும் போது மனம் தளர்ந்து, சுய அறிவை இழந்து விடுகிறார்கள். அதனால்தான் தவறான வழிகளில் பணத்தைத் தேட முனைகிறார்கள். அவர்கள் அதை ஒரு அதிர்ஷ்டகரமான வாய்ப்பாக எண்ணுகின்றார்கள். இலஞ்சம் வாங்கக் கூடிய ஒரு அதிகாரியும் இவ்வகைப் பட்டவரே. ஏனென்றால் எவ்வாறு பணம் சம்பாதிக்க முடியும் என்று அவர்களுக்குத் தெரியாது.

செல்வம் சேர்க்க வேண்டியதல்ல. அது வந்து சேர வேண்டும். அதற்கு நான் உப கதை ஒன்றைச் சொல்லுகின்றேன் கேளுங்கள்.

ஒரு நாள், ஒரு வங்கியின் காவலாளி பணம் நிறைந்த கைப்பையைக் கண்டார். அவர் அத்தப் பையை எடுத்துச் சென்று வங்கி மேலாளரிடம் கொடுத்தார். அதனைப் பார்த்தவர்கள் அந்தக் காவலாளியை ஒரு முட்டாள் என எண்ணினர்.

ஆனால் உண்மையிலே அவன்தான் பணம் இல்லாத ஒரு பணக்காரன். ஒரு வருடம் கழித்து, அந்த வங்கி அவருக்கு வரவேற்பாளராக வேலை வழங்கியது. மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவர் வாடிக்கையாளர் மேலாளராகப் பதவி உயர்வு பெற்றார். பத்து ஆண்டுகளுக்குப் பிறகு அவர் அந்த வங்கியின் மண்டலத்திலே நூற்றுக்கணக்கான ஊழியர்களை நிர்வகிக்கிப்பவராக உயர்ந்திருக்கிறார். தற்போது அவரது வருடாந்த போனஸ் கொடுப்பனவு மட்டும் அவர் அன்று கெண்டெடுத்த தொகையை விட மிக அதிகமாக இருக்கிறது.

எனவே முதலில் செல்வம் என்பது ரொக்கம் பணமோ அல்லது சொத்தோ அல்ல் அது ஒரு மனநிலை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள் என பில்கேட்ஸ் குறிப்பிட்டார்.

# அரசிலிருந்து விலக தயார்!

*மீண்டுமொருமுறை அறிவிப்பு விடுத்தது சு.க.*

கொழும்பு, நவ. 21

**"கட்சி மத்திய செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும்பட்சத்தில் நாளை வேண்டுமானாலும் அரசிலிருந்து வெளியேறுவதற்கு நாம் தயார்." - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளருமான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சி கிளைக்கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசிலிருந்து வெளியேறாமல் ஏன் இன்னும் அரசுடனேயே இருக்கின்றனர் என சிலர் கேள்வி கேட்கின்றனர். எமது கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானமொன்றை எடுக்கும் பட்சத்தில் நாளையே பதவிகளை துறந்து வெளியேறுவதற்கு தயார்.

எமது முதுகில் சவாரி செய்துவிட்டு, எம்மை கட்டுப்படுத்த முற்படுகின்றனர். எனவே, உள்ளாட்சி மன்றங்களில் நடக்கும் விடயங்கள் தொடர்பில் கட்சி உறுப்பினர்கள் சுயாதீனமாக முடிவெடுங்கள். கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்காது - என்றார். (அ)

# கொரோனாவால் குழந்தைகள் பாதிக்கப்படும் வீதம் குறைவு!

கொழும்பு, நவ. 21

வயதானவர்கள் மற்றும் நோயெதிர்ப்பு குறைபாடுள்ள நபர்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த சதவீத குழந்தைகள் மட்டுமே கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத், தற்போதைய தரவுகளின்படி குழந்தைகள் கோவிட்-19 தொற்று மற்றும் சிக்கல்களால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு.

எனவே குழந்தைகளுக்கு தடுப்பூசி போட தேவையில்லையென முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

குழந்தைகள் கடுமையான சிக்கல்களை எதிர்கொள்கின்றனர் என்பதற்கான போதுமான தரவுகள் இல்லாததால், குழந்தைகளுக்கு தடுப்பூசிகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

குழந்தைகளுக்கு தடுப்பூசி போட வேண்டியதன் அவசியத்தை ஆராய்ச்சி முடிவுகள் மற்றும் தரவுகள் சுட்டிக்காட்டும் பட்சத்தில், தடுப்பூசிகளை அவர்களுக்கு வழங்க தயங்கமாட்டார்கள் என்று ஹேமந்த ஹேரத் கூறினார்.

# தொழிற்கல்வி முறை மேம்படவேண்டும்

*முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 21

நாட்டில் தொழிற்கல்வி முறை மேம்படுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

முந்தைய ஆட்சிக் காலத்தில் தொழில் பயிற்சிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி படிப்புகளை தொடர ஆர்வமுள்ள மாணவர்களுக்கு முறைகளை அறிமுகப்படுத்தும் அதேவேளை, முன்னாள் அரசாங்கம் குழந்தைகளுக்கான 13 ஆண்டு கல்வி மாதிரியை கட்டாயமாக்கியது என்று அவர் கூறினார்.

இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, தற்போதைய அரசாங்கம் 13 வருட கட்டாயக் கல்வி மாதிரிக்கு ஆதரவாக உள்ளது.

இந்த வருடம் தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி கற்கைநெறிகளுக்காக 11,000 மாணவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர். தற்போதைய அரசாங்கம் தொழில்துறையை புறக்கணிக்கவில்லை.

அரசாங்கம் திட்டத்தை நிறுத்தி வைக்கவில்லை. அதை முன்னெடுத்துச் செல்கிறது - என்றார். (அ)

# இளம் தொழில் முயற்சியாளர்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டம்!

கொழும்பு, நவ. 21

சிறப்புத் திட்டத்தின் மூலம் மக்காச்சோளத்தில் தன்னிறைவு அடைவதை அரசு இலக்காகக் கொண்டிருப்பதாக சிறு பயிர்கள் தோட்டம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டுக்கான இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த மேலதிக செயலாளர் திலகா ஜயசுந்தர, சிறு பயிர் கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஐந்தாண்டு திட்டத்தை வகுத்துள்ளதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மசாலா பொருட்கள் மற்றும் சிறு பயிர்த்தொழில் மூலம் ஏற்றுமதி வருவாயை இரட்டிப்பாக்க எதிர்பார்க்கிறோம்.

தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 வீதத்தை மாத்திரமே வழங்குகின்றது. அதேவேளையில் அதனை 4 வீதமாக இரட்டிப்பாக்க எதிர்பார்த்துள்ளனர்.

அனைத்து இலங்கையர்களின் தனிநபர் வருமானத்தை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு இணங்க, தொழில்துறையில் அங்கம் வகிக்கும் தனிநபர்களின் தனிநபர் வருமானத்தை 6,500 அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதிலும் கவனம் செலுத்துகிறோம்.

சிறு பயிர்த் தோட்டங்களில் 10 வீதமான இளம் தொழில் முயற்சியாளர்கள் மட்டுமே ஈடுபட்டுள்ளனர். அதனை 30 வீதமாக அதிகரிக்க விரும்புகிறோம்.

அவர்கள் வகுத்துள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம், சீனி, முந்திரி மற்றும் பல பொருட்களின் இறக்குமதிச் செலவை 60 சதவீதம் குறைக்க விரும்புகிறோம் - என்றார். (ஐ)

# எரிபொருளுக்கு மீண்டும் விலைச் சூத்திரமா? இன்னும் முடிவில்லை என்கிறது நிதியமைச்சு

கொழும்பு, நவ.21

எரிபொருளுக்கு மீண்டும் விலை சூத்திரம் கொண்டுவருவது தொடர்பில் இதுவரையில் எந்தவொரு கொள்கை ரீதியான தீர்மானமும் எடுக்கப்படவில்லையென நிதி அமைச்சின் செயலாளர் எஸ்ஆர். ஆட்டிகல தெரிவித்துள்ளார்.

சந்தையில் தற்போது ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 20 ரூபாவும், ஒரு லீற்றர் டீசலுக்கு 36 ரூபாவும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 60 ரூபாவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு நட்டம் ஏற்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக இந்த வருடம் இதுவரை 210 பில்லியன் ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளதுடன் அதில் 65 பில்லியன் ரூபா கொரோனா தடுப்பூசி கொள்வனவுக்காக செலவிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

# வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் நடந்த திருட்டுகளுடன் தொடர்புடைய நால்வர் கைது!

வவுனியா, நவ. 21

வவுனியா மற்றும் கிளிநொச்சி பகுதிகளில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நால்வர் வாள்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் கடந்த செப்ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களிலும், இம்மாதமும் பல்வேறு திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இதற்கமைவாக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் குறித்த சம்பவங்கள் தொடர்பில் வாள்களுடன் நான்கு இளைஞர்களை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கடந்த செப்ரெம்பர் மாதம் 18 பவுண் நகை திருடப்பட்டமை, அதனைத் தொடர்ந்து ஒக்ரோபர் மாதம் ஆச்சிபுரம் பகுதியில் 10 பவுண் நகை மற்றும் மோட்டர் சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டமை, சிதம்பரபுரம் பகுதியில் பல்சர் ரக மோட்டர் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, தெற்கிலுப்பைக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை, இம் மாதம் உக்குளாங்குளம் பகுதியில் ஆலயத்துக்கு சென்ற பெண் ஒருவரிடம் 3 பவுண் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டமை மற்றும் கிளிநொச்சி உதயநகர் பகுதியில் சங்கிலி அறுக்கப்பட்டமை மற்றும் மோட்டர் சைக்கிள் ஒன்று திருடப்பட்டமை ஆகிய சம்பவங்களுடன் குறித்த நால்வருக்கும் தொடர்பு இருந்தமை விசாரணைகளின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், அவர்களிடம் இருந்து 2 மோட்டர் சைக்கிள், 4 வாள்கள், தாக்குதலுக்கு பயன்படுத்தப்படும் பொல்லுகள், 15 பவுண் நகை, முகத்தை மறைக்கும் கறுப்புத் துணி என்பன மீட்கப்பட்டுள்ளன. அவர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் கூறினர். (அ)

# கல்விமுறையில் மாற்றம் செய்யப்படுவது அவசியம்

*சுசில் பிரேமஜயந்த வலியுறுத்து*

கொழும்பு, நவ. 21



நவீன கால தேவையை பூர்த்தி செய்வதற்கும் சவால்களுக்கு முகம் கொடுப்பதற்கும் கல்வி முறையில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, மாணவர்களை தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சியை நோக்கிச் செலுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டுமென தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் மூன்று தடவைகள் சித்தியடையாத பட்சத்தில் மாத்திரமே ஒரு மாணவர் தொழிநுட்பக் கல்வியை நோக்கிச் செலுத்தப்படுகின்றார்.

மூன்று தடவைகள் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைய முடியாத ஒரு மாணவர் ஏற்கனவே எந்தவொரு கல்வியிலும் ஆர்வமில்லாமல் இருப்பார். எனவே அவர்களை தொழில்நுட்பக் கல்வி அல்லது தொழிற்பயிற்சியை நோக்கித் தள்ளுவது வீண் செயல்.

ஒரு மாணவன் ஒன்பதாம் வகுப்பில் கல்வி கற்கும்போதே தொழில் வழிகாட்டல் ஆரம்பிக்கப்படவேண்டும். மாணவர்களின் எதிர்காலம் குறித்து பெற்றோர்கள் கூட்டாக இணைந்து முடிவெடுக்க முடியும்.

குழந்தைகளின் எதிர்காலம் குறைக்கப்படக்கூடாது, எனவே மற்ற நாடுகளைப் போல நாட்டுக்கும் புதிய அமைப்பு தேவை.

இலங்கையில் மனித மூலதனச் சுட்டெண் இல்லை. அது எத்தனை மருத்துவர்கள், பொறியியலாளர்கள் மற்றும் ஏனைய நிபுணர்கள் தேவை என்பதை தீர்மானிக்கும்.

இவ்வாறான விடயங்கள் கலந்துரையாடப்பட்டு புதிய திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவேண்டும் - என்றார். (அ)

# இந்திய அரசுடனான நல்லுறவு இலங்கைக்கு அத்தியாவசியம்!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சுட்டிக்காட்டு



**கொழும்பு, நவ. 21**

**''எமது அயல் நாடான இந்தியாவுடனான நல்லுறவென்பது இலங்கைக்கு அத்தியாவசியம். இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையின் அடித்தளமாகக்கூட இந்த விடயத்தைக் கருதலாம்.'' - என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நடைபெற்ற வரவு - செலவுத் திட்டத்தின் 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

அணிசேராக் கொள்கை தற்போதைய சூழ்நிலைக்கு பொருத்தமற்றது என்ற கருத்தை நல்லாட்சியின் வெளிவிவகார அமைச்சர் முன்வைத்திருந்தார். அந்த கருத்துடன் உடன்பட முடியாது. நாம் அனைத்து நட்பு நாடுகளுடனும் சிறந்த நட்புறவை பேணி வருகின்றோம். ஒரு நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் மற்றைய நாட்டுடன் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடும் கொள்கையென்பது எமது வெளிவிவகாரக் கொள்கைக்கு எதிரான விடயமாகும்.

எமது அயல்நாடான இந்தியாவுடனான நல்லுறவென்பது எமக்கு அத்தியாவசியம். இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையின் அடித்தளமாகக்கூட இதனை கருதலாம். இரு நாடுகள், இரு அரசுகளுக்கு இடையில் மட்டுமல்ல இரு நாடுகளின் மக்களுக்கிடையிலும் சிறந்த நல்லுறவு உள்ளது.

பௌத்த கலாசாரத்துடன் தொடர்புடைய குஷி நகர் விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்பட்டு, திறந்து வைக்கப்பட்டது. எமது நாட்டில் இருந்து 100 பிக்குகள் சென்ற விமானமே முதலில் தரையிறங்கியது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி அங்கு வந்திருந்தார். ஸ்கொட்லாந்தில் பாரத பிரதமரை சந்தித்தபோது அதற்காக நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டேன். இந்தியாவின் பிராந்தியங்களுடனும் நாம் கொடுக்கல், வாங்கல்களிலும் ஈடுபட்டுவருகின்றோம்.

சீனாவும் எமக்கு அதிக உதவிகளை வழங்கும் நாடு. இலங்கையின் ஏற்றுமதியில் பெரும்பங்கு மேற்குலகமே செல்கின்றது. ஆபிரிக்க நாடுகளுடனான உறவை பலப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கையை மஹிந்த ஆட்சிகாலத்தில் நாம் முன்னெடுத்தபோது சிரித்தனர். புதிய நாடுகளுடனான தொடர்புகள் அவசியம். ஆக ஒரு வட்டாரத்துக்குள் மட்டும் இருக்காது, அனைத்து நட்பு நாடுகளுடன் நாம் சிறந்த நல்லுறவை பேணுவோம்.

அதேவேளை, ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் உயர்மட்டக்குழு எமது நாட்டுக்கு வந்தது. என்னையும் சந்தித்து கலந்துரையாடினர்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கான நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத் திட்டங்கள், அவற்றின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவரை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளன். பேச்சுகள் தொடர்கின்றன. எனவே, ஜி.எஸ்.பி. பிளஸ் விடயத்தில் சிக்கல் வராது என்றே நம்புகின்றேன் - என்றார். (அ)

# போர் வெற்றிகளை நினைவு கூரும் சின்னங்கள் அமைக்கப்படக்கூடாது

## அகலகட சிறிசுமண தேரர் தெரிவிப்பு

*கொழும்பு, நவ. 21*

போர் வெற்றிகளை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்படக் கூடாது என பேராசிரியர் வண. அகலகட சிறிசுமண தேரர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் உலக பக்தர்கள் அனைவரும் வழிபடும் வகையில் அனுராதபுரத்தில் அமைக்கப்பட்ட 'சந்தஹிரு சேயா' தூபி ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் சந்தஹிரு சேயா நிர்மாணிப்பு தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்த வெற்றியை நினைவு கூரும் வகையில் சந்தஹிரு சேயா நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் இது தோல்வியடைந்த மக்கள் மீது வெறுப்புணர்வை தூண்டும் நெருப்பு எனவும் இது ஆரம்பிக்கப்பட்டபோது தாம் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தார் என்றும் அவர் கூறியுள்ளார்.



இதுபோன்ற செயல்களை செய்யக்கூடாது. இதனால் சிங்கள - பௌத்தர்கள் மற்றும் சில படைவீரர்களே இந்த நிர்மாணத்தில் மகிழ்ச்சி அடைவார்கள். எல்லோரும் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்

சந்தஹிரு சேயா தூபி தாய்நாட்டின் ஒற்றுமைக்காக பெரும் தியாகங்களைச் செய்த இராணுவ வீரர்களை நினைவு கூரும் வகையிலும் முப்பது வருடகால யுத்தத்தின் முடிவைக் குறிக்கும் முகமாகவும் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வலி.தென்மேற்கு பிரதேச சபை முதலிடம்

*யாழ்ப்பாணம், நவ. 21*

இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான தமிழ்மொழி மூலமான விவாத போட்டியில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் விவாத அணி பெற்றுக்கொண்டுள்ளது.

இரண்டாமிடத்தை மட்டக்களப்பு மண்முனை மேற்கு பிரதேசசபை பெற்றதுடன் மூன்றாமிடத்தை புதுக்குடியிருப்பு பிரதேசசபை பெற்றுக்கொண்டது.

முதலாமிடத்தை பெற்றுக் கொண்ட மானிப்பாய் பிரதேச சபையின் விவாதக் குழுவில் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன், உறுப்பினர்களான அருட்குமார் ஜோன் ஜிப்பிரிக்கோ, கந்தையா ஜெசிதன், லோகப்பிரகாசம் ரமணன் , சிவசண்முகநாதன் அனுசன் உள்ளிட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அணியின் தலைவராக உறுப்பினர் கந்தையா ஜெசிதன் செயற்பட்டிருந்தார். (அ)

# டில்லியிடம் இருந்து பெருந்தொகை கடனை எதிர்ப்பார்க்கும் கொழும்பு!

*கொழும்பு, நவ. 21*

இந்தியாவிடமிருந்து 50 கோடி டொலர்களை கடனாக பெறும் முயற்சியில் இலங்கை இறங்கியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை அரசின் உயர்மட்ட பிரமுகர்கள், இந்திய அரசுடன் பேச்சுகளை நடத்திவருகின்றனர் என தெரியவருகின்றது.

எரிபொருளை இறக்குமதி செய்வதற்காகவே இந்த கடன் தொகையைப் பெறுவதற்கு இலங்கை உத்தேசித்துள்ளது.

# இவ்வாண்டின் சாதனைப் பெண்ணாக இலங்கை தமிழ் அகதி பிரியா நடேஸ்!

## அவுஸ்திரேலிய சஞ்சிகையால் கௌரவிப்பு

*கான்பரா, நவ. 21*

அவுஸ்திரேலியாவின் நாடு கடந்தல் முயற்சிக்கு எதிராகப் போராடிவரும் இலங்கைத் தமிழ் அகதிப் பெண் பிரியா - நடேஸ் இவ்வாண்டின் சாதனைப் பெண்ணாக ( Woman of the Year) அவுஸ்திரேலியாவின் முக்கிய மாதர் சஞ்சிகையொன்றினால் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்ப முயற்சிகள் இடம்பெற்று வரும் நிலையில் பிரியா - நடேஸ் குடும்பம் தங்களது இருப்புக்கான தொடர்ந்து போராடி வருகிறது. இவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் பல தரப்புக்களும் ஆதரவுக் கரம் நீட்டியுள்ளன.




இந்தப்பின்னணியில், தனது குடும்பத்தின் இருப்புக்காக போராடிவரும் பிரியாவுக்கு அவுஸ்திரேலியாவின் முக்கிய மாதர் சஞ்சிகையான மேரி கிளாரி (Marie Claire) இவ்வாண்டின் சாதனைப் பெண் என்ற கௌரவத்தை வழங்கியுள்ளது.

பிரான்ஸில் 1937 இல் ஆரம்பிக்கப்பட்டு பல்வேறு நாடுகளிலிருந்து வெளிவந்து கொண்டிருக்கும் மேரி கிளாரி என்ற இந்த சஞ்சிகையின் அவுஸ்திரேலிய பதிப்பு பிரியா உட்பட 9 பெண்களுக்கும் பிரியா குடும்பத்தின் விடுதலைக்காக போராடிய பிலோலாவின் பெண்கள் அமைப்பு (The Women of Biloela) என்ற குழுவுக்கும் இந்த கௌரவத்தை தமது டிசெம்பர் மாத சஞ்சிகை ஊடாக வழங்கியுள்ளது.

# வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் குழப்பம் புரிந்த ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு

*வவுனியா, நவ. 21*

வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்தில் குழப்பம் விளைவித்த ஆசிரியருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:


வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பாடசாலை நேரத்தில் பாடசாலைக்கு வந்த பெற்றோரான ஆசிரியர் ஒருவர் தனது மகனின் வகுப்பாசிரியர் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்ததுடன், புகைப்படம் எடுத்தார் என குறித்த பாடசாலை அதிபரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் குறித்த ஆசிரியர் வவுனியா தெற்கு வலயக் கல்வித் திணைக்களத்தில் விளக்கம் அளிப்பதற்காக சென்ற நிலையில் அங்கு இருந்த வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் முரண்பட்டு வாய்த் தர்க்கம் புரிந்துள்ளதுடன், அதிகாரிகளுடன் அநாகரிகமாக நடந்து கொண்டார். இது தொடர்பில் 119 பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து அங்கு பொலிஸார் சென்றதும் குறித்த ஆசிரியர் அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்நிலையில் வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளரால் குறித்த ஆசிரியருக்கு எதிராக வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




# பிரிட்டிஷாரிடமிருந்து காந்தி பெற்றது சுதந்திரம் அல்ல பிச்சை!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

இந்த வாரம், அரசியல் மற்றும் அரசியல்வாதிகளை விட, சுவாரஸ்யமான எதைப் பற்றியாவது பேசலாம். சினிமா, கலைத்துறை மற்றும் திரைப்பட நடிகர்களைப் பற்றிப் பேசலாமா? புகழ்பெற்ற பொலிவுட் நடிகையான 'பத்மஸ்ரீ' கங்கணா ரணாவத் பற்றி? ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தின் கைகளால் இந்தியாவின் நான்காவது உயர்ந்த விருதான பத்மஸ்ரீ வாங்கிய மூன்று நாட்களுக்குள்ளாகவே, இந்த 34 வயது நடிகை ஒரு பெரிய சர்ச்சைப் புயலைக் கிளப்பினார். இந்தியா சுதந்திரம் வாங்கியது 1947ஆம் ஆண்டில் அல்ல, 2014ஆம் ஆண்டுதான் (அதாவது நரேந் திர மோடி முதல்முறை பிரதமரானபோது) என்று பிரகட னம் செய்தார். "பிரிட்டிஷார் நமக்குக் கொடுத்தது சுதந்திரம் அல்ல, பிச்சை" என்று ஒரு தேசிய தொலைக் காட்சி சனலின் வருடாந்த விழாவில் அறிவித்தார். இந்திய சினிமாவில் மிக அதிகமாக சம்பளம் வாங்கும் நடிகைகளில் ஒருவரான கங்கணா, ஒரு திரைப்படத்துக்கு பதினொரு கோடி சம்பளம் வாங்குகிறார் என்று சொல்லப்படுகிறது. சில முக்கியமான பிரபலமான படங்களில் வெவ்வேறு தோற்றங்களில் நடித்து, பல தேசிய விருதுகளையும் வாங்கி யிருக்கிறார். சமீபத்தில் 'தலைவி' என்ற திரைப்படத்தில் ஜெயலலிதாவின் வேடத்தில் நடித்து பெரிதும் பாராட்டப்பட்டது.

அரசியல்வாதிகள், திரைப்படத்துறையினர், கல்வித்துறையினர், வரலாற்றாசிரியர்கள், பொதுமக்கள் உட்பட பல தரப்பினரும் கங்கணாவின் 'பிச்சை' சொல்லுக்கு கடுமையான எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் அவரோ, தான் 'பிச்சை' என்று சொல்லியதை நியாயப்படுத்தியது மட்டுமல்லாமல், மகாத்மா காந்தியையும் கேவலப்படுத்தி, நாட்டுக்கு சுதந்திரம் வாங்கிக்கொடுத்த வகையில் காந்தி 'தேசத் தந்தை' என்று புகழப்படுவது குறித்தும் கேள்வி எழுப்பினார். பிரிட்டிஷாரோடு சதிவேலையில் ஈடுபட்டு பகத்சிங், சுபாஷ் சந்திரபோஸ் போன்ற எழுச்சிமிக்க சுதந்திரப் போராட்ட வீரர்களை வெள்ளையரிடம் ஒப்படைக்க காந்தி ஒத்துக்கொண்டதாகக் குற்றம் சாட்டினார். காந்தியின் அகிம்ஸா கொள்கையைக் கிண்டலடித்த கங்கணா, "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு" என்ற காந்தியின் கொள்கையால் அவருக்குக் கிடைத்தது சுதந்திரமல்ல, பிச்சைதான் என்று கூறினார்.

மகாத்மா காந்தியின் கொள்ளுப்பேரனான துஷார் காந்தி, கங்கணாவின் பேச்சு ஒட்டுமொத்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை இழிவு படுத்தியதாக வருத்தம் தெரிவித்தார். ஒரு கன்னத்தை அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டுவதற்கு வீரம் தேவை என்றும், அது கங்கணா போன்ற காந்தி வெறுப்பாளர்களுக்குப் புரியாது என்றும் துஷார் காந்தி கூறினார். கங்கணாவை 'போலி தேசபற்றாளர்' என்றும் அவர் சாடினார். மகாத்மா காந்தி படுகொலைக்குக் காரணமாக இருந்தவர் சவார்க்கர் என்று முன்பு அவர் கூறியிருந்தார். சவார்க்கருக்கு 'பாரத ரத்னா' எனும் மிக உயரிய விருதை வாங்கித்தர முயற்சி எடுத்துவரும் மகாராஷ்டிர பா. ஜ. க. வின்மீதும் துஷார் காந்தி விமர்சனங்கள் முன்வைத்தார். காந்தியின் படுகொலையின்போது விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சவார்க்கர், போதுமான ஆதாரம் இல்லாததால் விடுதலை செய்யப்பட்டார். நீதிமன்றம் அவரை விடுதலை செய்ததே தவிர, அவர் குற்றமற்றவர் என்று கூறவில்லை என்பதை துஷார் காந்தி நினைவு படுத்தினார்.

பிச்சை பற்றிய கங்கணாவின் இந்த சொற்களையும் மகாத்மா காந்திமீதான அவரது விமர்சனங்களையும் கடுமையாக எதிர்த்தவர்களில் பா. ஜ. க. வின் நாடாளுமன்ற உறுப்பினர் வருண் காந்தியும் ஒருவர். தனது சொந்தக் கட்சியின் கொள்கைகள், அரசு செயல்பாடுகள் ஆகியவைபற்றி அவர் சமீபகாலமாக வெளிப்படையான விமர்சனங்களைக் கூறிவருகிறார். "தன் வார்த்தைகளின் மூலம், இந்தியாவின் விடுதலைக்காக உயிரையே கொடுத்த ஆயிரக்கணக்கான விடுதலைப் போராட்ட வீரர்களைக் கங்கணா இழிவு படுத்திவிட்டார். இந்தக் கருத்துக்களை என்னவென்று அழைப்பது - துரோகமா, பைத்தியக்காரத்தனமா?" என்று, சஞ்சை காந்தியின் மகனும் இந்திரா காந்தியின் பேரனுமான வருண் காந்தி கேள்வி எழுப்பினார்.

கங்கணா தேசத்துரோகம் இழைத்துவிட்டார் எனவும், தேச இறையாண்மையை இழிவுபடுத்திவிட்டார் எனவும் சிலர் காவல்துறையில் புகார் செய்திருக்கின்றனர். வேறு சிலரோ, அவருக்குக் கொடுத்த பத்மஸ்ரீ விருதை அரசு திரும்பப் பெறவேண்டும் என்றனர்.

"தங்களது நீட்சியாக பிரிட்டிஷார் காங்கிரஸால் இந்தியாவை ஆட்சி செய்ய வைத்தபிறகு அதிகாரத்தில் இருந்த காங்கிரஸ் கட்சி, காந்தி உட்பட தங்களது சொந்தத் தலைவர்களைப் புகழ்வதாகவும் வீர் சவார்க்கர் போன்ற தேசப்பற்றாளர்களின் பங்களிப்பை அழித்தும் வரலாற்றை மாற்றி எழுதினார்கள்" என்று கங்கணா குற்றம் கூறினார். இந்தக் குற்றச்சாட்டு பொய் என்று நிரூபிக்கப்பட்டால், தானே பத்மஸ்ரீ விருதைத் திருப்பி அளித்துவிடுவதாக அவர் சவால் விட்டார். சவார்க்கர் ஒரு தேசப்பற்றாளர் இல்லை என்றும், காந்தியின் சுதந்திரப் போராட்டத்துக்கு எதிராக இயங்கிய பிரிட்டிஷ் ஏஜண்ட் எனவும் காங்கிரஸ் தெரிவிக்கிறது. ஆனால், பாஜகவும் அதன் தாய் அமைப்பான ஆர்.எஸ். எஸ்ஸும் சவார்க்கரை பாரத மாதாவின் புதல்வர் என்று கொண்டாடுகின்றன.

இந்திய சினிமாவில் வேறு யாராவது இந்த 'பிச்சை' விவாதத்தை வைத்திருந்தால் பொதுமக்கள் இந்த அளவுக்கு எதிர்ப்பு தெரிவித்திருக்க மாட்டார்கள். பா. ஜ. க. வையும் பிரதமர் மோடியையும் கங்கணா வெளிப்படையாகப் பாராட்டுவதால், அவருக்கு பத்ம விருது கிடைத்ததா என்று சிலர் கேள்வி எழுப்பினர். வேறு சிலரோ பிச்சைபற்றிய அவரது பேச்சு, பத்ம விருதுக்காக மோடி அரசுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவே இருந்ததா என்றும் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

## நடிகை கங்கணா கிளப்பும் சர்ச்சை



ஒருவேளை, பா. ஜ. க. வையும் பிரதமர் மோடியையும் பாராட்டுவதற்கு பதிலாக, அவரைக் கடுமையாக எதிர்ப்பவராகக் கங்கணா இருந்திருந்தால் இந்த விருது கிடைத்திருக்குமா என்று சிலர் கேள்வி எழுப்பினர். தெற்கில் உள்ள உண்மையான திறமைசாலிகள் நிராகரிக்கப்படுகிறார்கள் என்றும், மத்திய அரசு விருதுகளை முடிவெடுக்கும்போது பாரபட்சம் காட்டுகிறது என்றும் பலர் கூறினர். தெற்கிலிருந்து யாராவது இதுபோன்ற விருதுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்படும்போது அதற்குப் பின்னால் அரசியல் இருக்கிறது என்றும அவர்கள் கூறினர். உதாரணமாக, மசாலா படமான ரிக்ஷாகாரனில் (1971) நடித்ததற்காக எம். ஜி. ஆருக்கு தேசிய விருது வழங்கப்பட்டது நடிப்புத் திறமைக்காக அல்ல என்றும், அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, தனது ஆதரவுக் கட்சியான தி. மு. க. வின் தலைவர் கருணாநிதியுடன் உள்ள நட்பை வலுப்படுத்துவதற்காக எடுத்த முடிவு என்றும் இந்த விமர்சகர்கள் கூறுகின்றனர். அப்போது எம். ஜி. ஆர் தி. மு. க. வில் இருந்தார், அதற்கு அடுத்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் தி. மு. க. விலிருந்து பிரிந்து தனிக்கட்சி தொடங்கினார். டிசம்பர் 1987இல் எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பின்னர் இந்தியாவின் மிக உயரிய விருதான 'பாரத் ரத்னா' அவருக்கு வழங்கப்பட்டது. எம். ஜி. ஆர் ரசிகர்களின் ஆதரவைப் பெறுவதற்காக அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி எடுத்த முடிவு என்று சிலர் குற்றம் சாட்டினர். 1989 பாராளுமன்ற தேர்தலில் ஜெயலலிதாவின் அ. இ. அ. தி. மு. க. வுடன் கூட்டணி வைத்த காங்கிரஸ், லோக் சபாவில் தமிழ்நாட்டுக்கு ஒதுக்கப்பட்ட 39 இடங்களில் 38 இடங்களைப் பிடித்தது.

இதற்கு மாறாக, சிறந்த நடிகரான சிவாஜி கணேசனுக்கு இந்தத் தலைவர்களிடமிருந்து எந்த ஒரு விருதும் கிடைக்கவில்லை. அவருக்கு அரசியல் முக்கியத்துவம் இல்லை என்பதும், வாக்கு வங்கி அவரிடம் கிடையாது என்பதும் ஒரு காரணம். 'கலைத்துறைக்கு பங்களிப்பு செய்ததற்காக' என்ற பெயரில் வழங்கப்படும் இந்த விருதுகளை முடிவெடுப்பதில் அரசியலும் சொந்த விருப்பு வெறுப்புகளும் முக்கிய இடம் பிடிக்கின்றன என்று மத்திய அரசுகள் அடிக்கடி நிரூபித்துவருகின்றன.

கங்கணாவின் புயலின்போது பொலிவுட்டிலும் கொஞ்சம் கசப்பு நடந்தது. சூர்யாவின் 'ஜெய்பீம்' படத்தில் ஒரு குடத்தைக் கண்டுபிடித்தார்கள். அது ஒரு அக்கினிக் குடம், வன்னியர் சங்கத்தின் சின்னம். அதுமட்டுமின்றி, படத்தில் வரும் வில்லனான காவல் துறை ஆய்வாளரின் பெயர் குரு என்று அமைக்கப்பட்டிருந்தது. மறைந்த காடுவெட்டி குரு, வன்னியர் சங்கத்தின் தலைவராக இருந்தார், மற்றும் வன்னியர் சங்கத்தின அரசியல் முகமான பாட்டாளி மக்கள் கட்சியின் ஒரு பெரும் புள்ளியாக இருந்திருக்கிறார். பா. ம. க. வில் இருந்து விலகி சொந்தக் கட்சியைத் தொடங்கி, பின் மனம் உடைந்து காலமானார். வன்னியர் சங்கம், சூர்யா மற்றும் படத்தின் தயாரிப்பாளரான அவரது மனைவி ஜோதிகா, திரைப்படத்தின் இயக்குநர் த. ச. ஞானவேல், திரைப்படத்தை வெளியிட்ட ஓடிடி தளமான அமசோன் ஆகிய நான்கு தரப்புகளும் மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும், மான நஷ்ட ஈடாக ஐந்து கோடி தரவேண்டும் என்றும் நோட்டீஸ் அனுப்பியது. திரைப்படத்தை வெளியிட்ட ஓடிடி தளமான அமசோ னுக்கும் அனுப்பப்பட்டது. பா. ம. க. வின் துணைத் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான அன்பு மணி ராமதாஸ் ஒரு காட்டமான கடிதத்தை சூர்யாவுக்கு எழுதினார். திட்டமிட்டு வன்னியர்களுக்கு அவமானம் சேர்ப்பதற்காக இதுபோன்ற ஒரு காவல்துறை ஆய்வா ளர் கதாபாத்திரத்தை உருவாக்கி, அவர் பழங்குடியின ரைக் கொடூரமாகக் கொன்றுவிட்டதாக ஜெய்பீம் படம் பொய்யான பிரச்சாரத்தை செய்கிறது என்றும், உண்மையிலேயே சம்பவத்தில் இருந்த காவல்துறை அதிகாரியின் பெயர் அந்தோணிசாமி என்பதையும் எடுத்துக்காட்டினார். இதற்கு மன்னிப்பும் கோரினார். ஆனால், சூர்யா மன்னிப்பு கேட்க மறுத்துவிட்டார். "தவறுகளை சுட்டிக் காட்டிய உடனேயே அவை சரி செய்யப்பட்டுவிட்டன" என்று நவம்பர் 12ஆம் திகதி சூர்யா அறிவித்தார்.

தமிழக தயாரிப்பாளர் சங்கத் தலைவரான பாரதிராஜா உட்பட, ஒட்டுமொத்த திரையுலகமே சூர்யாவுக்கு ஆதரவு தந்தது. வன்னியர்களல்லாத பொதுமக்கள், அரசியல் தலைவர்கள், ஊடகங்களும் ஜெய்பீம் குழுவுக்கு ஆதரவு தந்தன. "இந்தத் திரைப்படம் யாரை யாவது காயப்படுத்தியிருந்தால் நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன், இதை வேண்டுமென்றே செய்யவில்லை" என்றுமட்டும் சூர்யா சொல்லியிருந்தாலே வன்னியர் தலைவர்கள் சமாதானமாகியிருப்பார்கள் என்று சிலர் கூறினர்.

ஆளும்கட்சியான தி. மு. க. சூர்யாவுக்கு ஆதரவாக நின்றது அவருக்கு ஒரு பெரிய பலமாக அமைந்தது.

இந்த விஷயம் பற்றியும், தமிழகம் மட்டுமல்லாமல் பா. ஜ. க. வின் டெல்லி பற்றியும் இன்னும் பேசுவதற்கு சில சுவாரஸ்யமான விஷயங்கள் இருக்கின்றன. நாளைப் பொழுதே அதை ஒரு கோப்பை தேநீரோடு நான் உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன். வணக்கம்.

# ஹவாயில் நடந்த புரட்சியின் போது அரச குடும்பத்திற்கு என்ன நடந்தது?

குரு அரவிந்தன்


King kamehameha

'எரிமலைத் தீவான ஹவாயில் மன்னராட்சிக்கு எதிராக நடந்த புரட்சியின் போது அரச குடும்பத் தவர்களுக்கு என்ன நடந்தது, அந்த அரசகுடும்பத்தவர்கள் எல்லாம் எங்கே?' என்ற கேள்வியை வாசக நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டிருந்தார். முக்கியமாக பிரெஞ்சுப் புரட்சியின் போது அந்த அரசகுடும்பங்களுக்கு நடைபெற்றது போல கழுத்து வெட்டப்பட்டோ, அல் லது தூக்கில் இடப்பட்டோ கொடூரமர ணம் சம்பவித்ததா? அல்லது வேறுவித மாகத் தண்டிக்கப்பட்டார்களா என்பதை அறிவதிலேதான் அவரது வரலாற்றுச் சிந்தனை இருந்தது. கட்டுரைகளில் சிறிது வரலாறும் இடம் பெற்றால் அந்த இடத்தின் வரலாற்றுச் சிறப்புப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முடியும் என்பதையும் அவர் தெரிவித்ததால்தான், இந்தத் தேடல் ஏற்பட்டது.

ஹவாயில் கொனலுலுவில் உள்ள புகழ்பெற்ற வைகீக்கீ கடற்கரையில் உள்ள கமே ஹமேகா என்ற புகழ்பெற்ற மன்னரின் சிலைக்கு மலர்மாலை சூட்டி மன்னரின் காலடியில் தினமும் மலர்கள் தூவியிருந்தார்கள். சிலைகளை உடைத் தெறியும் இந்தக் காலத்தில், அவரைத் தனிப்பட்ட முறையில் மதித்தவர்கள் இதைச் செய்திருக்கலாம். பொதுவாக ஜனநாயக அரசியலுக்கு, அல்லது இடதுசாரி அரசியலுக்கு வந்தவர்கள் மன்னராட்சியை மறக்கவே விரும்பு வார்கள். எனவேதான் நான் சந்தித்த உள் ளூர் மக்களிடம் அவர்களின் முதலாவது மன்னரைப் பற்றி விசாரித்தேன்.

1810 ஆம் ஆண்டு ஹவாய் இராச் சியத்தை நிறுவிய மன்னனான கமே ஹமேகாவின் சிலை ஒன்று கொனலுலு டவுன்ரவுணில் உள்ள அலையோலானி மண்டபத்திற்கு முன்னாலும், இது போன்ற இன்னுமொரு சிலை பிக் ஐலண்ட் என்று சொல்லப் படுகின்ற ஹவாயின் இன்னுமொரு பெரியதீவில் இருப்பதையும் அங்கு சென்ற போது நான் அவதானித்தேன். ஒரே மாதிரியான இரண்டு சிலைகள் எப்படி வந்தன என்று விசாரித்த போது அதைப் பற்றி ஒரு கதையே சொன்னார்கள். 1878 ஆம் ஆண்டு கப்டன் குக் ஹவாய்தீவை அடைந்த 100 வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் முகமாக மன்னருக்கு ஒரு சிலைவைக்க முற்பட்டாலும், அந்தச் சிலையின் வேலைகள் முற்றுப் பெற வில்லை. இச்சமயத்தில் மன்னர் இறந்து விடவே அவருடைய இடத்திற்கு வந்த டேவிட் ஹலகாவுவா மன்னன் அந்தச் சிலையை அலையோலானி மண்டபத் திற்கு முன்னால் அமைப்பதற்கு ஏற்பாடு செய்தார். 1883 ஆம் ஆண்டுதான் இந்தச் சிலை வடிவமைக்கப்பட்டு ஹவாய் தீவுக்கு அனுப்பி வைக்கப்பட்டபோது, சிலையைக் கொண்டு வந்த கப்பல் போக் லாண்ட் தீவுகளுக்கு அருகே மூழ்கிப் போகவே, காப்புறுதி இருந்ததால், அதுபோன்ற வேறு ஒரு சிலையைச் செய்யும்படி கேட்டிருந்தார்கள்.

புதிய சிலை செய்து அனுப்பப்பட்ட அதே சமயம், போக்லாண்ட் கடற் தொழிலாளர் சிலர் பழைய சிலையைக் கடலில் இருந்து மீட்டெடுத்திருந்தனர். 875 டொலரைக் கொடுத்து அந்தச்சிலை யையும் இவர்கள் வாங்கினார்களாம். முதலில் செய்யப்பட்ட மன்னரின் இந்தச் சிலை மன்னர் பிறந்த இடமான ஹோகாலா என்ற இடத்தில் நிறுவப்பட்டது. இதனால்தான் ஒரே மாதிரியான கமே ஹமேகா மன்னரின் இரண்டு சிலைகள் ஹவாய் மக்களுக்குக் கிடைத்தது. ஹவாய் தீவுகளை அமெரிக்காவின் 50ஆவது மாகாணமாக்கிய போது இன்னுமொரு சிலை 1969 ஆம் ஆண்டு அமெரிக்கா வின் தலைநகரில் நிறுவப்பட்டது. இந்த சிலை முன்னாள் அமெரிக்க அதிபராக இருந்த பராக் ஒபாமா அவர்கள் பதவி ஏற்ற போது பொதுமக்கள் பார்வைக்காக பொது இடத்தில் வைக்கப்பட்டது. கார ணம் பராக் ஒபாமா ஹவாயில் உள்ள கொனலுலுவில் கப்பியோலானி மருத்துவ மனையில்தான் 1961 ஆம் ஆண்டு பிறந்திருந்தார்.

கமே ஹமேகா ஹவாயில் பிக்ஐலன்ட் என்று சொல்லப்படுகின்ற பெரிய தீவில் பிறந்து வளர்ந்த முதலாவது மன்னரா வார். ஹவாய் வானத்திலே வால் நட்சத் திரம் (ualley's Comet) தோன்றிய வருடமான 1758 ஆம் ஆண்டுதான் இவர் பிறந்ததாகச் சொல்கிறார்கள். அங்கே இருந்த 'நாகக்கல்' என்று சொல்லப் படுகின்ற பெரிய கல்லைத் தனது பலத் தைப் பாவித்துத் தூக்கியதால் அவரை மன்னராக ஏற்றுக் கொண்டதாகவும் கதைகள் உண்டு. தமிழர் பிரதேசத்தில் இன்றும் நாகவழிபாட்டு வழக்கமும், சில கிராமங்களில் கல்லைத் தூக்கி வலிமை யைப் புலப்படுத்தும் வழக்கமும் நடை முறையில் இருபதும் நினைவில் வந்தது.

1810 ஆம் ஆண்டு தனது படைகளுடன் வைகீக்கி கடற்கரையில் போரிட்டு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ஹவாய் தீவுகள் எல்லாம் கமே ஹமேகா மன்னனின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன. 1795 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த இவர் 1819 ஆம் ஆண்டு மரண மானதைத் தொடர்ந்து இவரது மகன் பதவிக்கு வந்தார். அவர் கடைசிக் காலத்தில் வழிபட்ட வழிபாட்டுத் தலத்தையும் பெரிய தீவிற்குச் சென்றபோது பார்க்க முடிந்தது.

மொத்தமாக எட்டு பேர் தொடர்ச்சி யாக ஹவாய் அரசபீடத்தில் இருந்தார் கள். இவர்களில் ஏழு பேர் ஆண்களா கவும் கடைசியாகப் பதவி ஏற்றவர் மட் டும் பெண்ணாக இருந்தார். லில்லிஜோ கலானி என்பது இவரது குடும்பப்பெயர். 1891 ஆண்டு கடைசியாகப் பதவிக்கு வந்த அரசியான இவர் 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை பதவியில் இருந் தார். அழகுணர்வு கொண்ட இவர் ஆடம்பர வாழ்க்கையில் அதிக பணத் தைச் செலவிட்டதால் மக்கள் வெறுப் படைந்தனர். அரசியின் ஆடம்பரமான மாளிகையான 'லோலானி பலஸ்' என்ற மாளிகை அரச பரம்பரையினர் வாழ்ந்த மாளிகையாகையால் அதையும் பொது மக்கள் பார்ப்பதற்கு அனுமதிக்கிறார்கள். அங்கு சென்று பார்த்த போது, தரை விரிப்பான கம்பளத்தில் இருந்து 14 கரெட் வைரம் வரை எல்லாமே மிக விலை உயர்ந்த பொருட்களாக இருப் பதை அவதானிக்க முடிந்தது.

சுமார் 128 வருடங்களுக்கு முன் ஹவாய் மண்ணில் நடந்த எதிர்பாராத சம்பவம் ஒன்று ஹவாயின் சரித்தி ரத்தையே மாற்றி அமைக்கக் காரணமாக இருந்தது. 1893 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி பிரபல வர்த்த கர்களும், கரும்புத்தோட்ட முதலாளி களுமாக மொத்தம் ஆறு பேர் சேர்ந்து ஹவாயில் அரச ஆட்சியைக் கவிழ்த்தார் கள். நிலச்சொந்தக்காரர்கள் தங்களுக் கென்று பாதுகாப்புப் படையை வைத் திருந்ததால் அவர்களுக்கு இது இலகுவாக இருந்தது. இதில் நான்கு அமெரிக்கர்கள், ஒரு பிரித்தானியர், ஒரு ஜேர்மனியர் ஆகியோர் முக்கியமாக இடம் பெற்றிருந்தனர். அதுவே பின்னாளில் அமெரிக்காவின் 50ஆவது மாகாணமாகக் ஹவாய் மாறுவதற்கு வழிவகுத்தது. இங்கேயும் அரசபதவிக் காக நடந்த குளறுபடிகள் அமெரிக் காவுக்குச் சாதகமாக அமைந்தன. காரணம், அமெரிக்காவின் பசுபிக் கடற்பிராந்தியப் பாதுகாப்புக்கு ஹவாய் தீவுகள் முக்கியமாக அவர்களுக்குத் தேவைப்பட்டன. இதுவே ஒரு





கட்டத்தில் ஆயுதப்புரட்சி இன்றி, ஹவா யில் அரசியல் மாற்றம் ஏற்பட வழிவகுத்தது.

ஹவாய் மன்னராட்சியின் வீழ்ச்சியின் போது அமெரிக்காவின் யு.எஸ்.எஸ் பொஸ்டன் என்ற 284 மாலுமிகளைக் கொண்ட கடற்படைக் கப்பல் ஒகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி 1892 ஆம் ஆண்டு தொடக்கம் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி 1893 ஆம் ஆண்டுவரை அங்குள்ள துறைமுகத்தில் தரித்து நின்றதாகப் பதிவுகள் இருக்கின்றன. ஹவாயில் உள்ள அமெரிக்கர்களின் சொத்துகளுக்கும் உயிர்களுக்கும் ஏதாவது ஆபத்து ஏற்பட் டால், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்காக ஜனவரி 16 ஆம் திகதி 1893 ஆம் ஆண்டு பிற்பகல் அமெரிக்கக் கப்பல் படையினர் அப்பகுதிகளில் பாதுகாப்பிற்காக நிறுத்தப்பட்டிருந்த னர். ஏன் அவர்கள் அங்கு நிற்கிறார்கள் என்பதோ, ஹவாயில் மன்னராட்சி முடி வுக்கு வரப்போகிறது என்பதோ மக்க ளுக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை.

வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஹவாய் அரசி லில்லிஜோ கலானி 1917 ஆம் ஆண்டு மரணமானார். அமெரிக்கா வின் ஒரே ஒரு இளவரசியாகத் 95 வய தான, ஹவாயின் அரசபரம்பரைக் கடைசி வாரிசான Kekaulike Kawananakoa ஹவானனகோவா இப்போதும் இருக் கின்றார். கோடீஸ்வரியான இவருக்குக் ஹவாய், கலிபோர்னியா, வாஷிங்டன் ஆகிய இடங்களில் குதிரைப்பண்ணை கள் இருக்கின்றன. இவரை ஒருபால் சேர்க்கையாளர் என்றும் ஒரு ஊடகம் குறிப்பிட்டிருந்தது. ■










# அமெரிக்க, இந்திய நலன்களை திருப்திப்படுத்தவா சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம்?

**பேராசிரியர் கே. ரீ. கணேசலிங்கம்**

ஈழத்தமிழருக்கும் அமெரிக்காவுக்குமான உறவு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர்களின் விஜயத்தோடு அதிகம் முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றாகக் காணப்படுகிறது. ஈழத்தமிழரின் அரசியல் இருப்பில் அதிக திருப்பங்களை ஏற்படுத்தக்கூடிய பிராந்திய அரசான இந்தியாவும் சர்வதேச வல்லரசான அமெரிக்காவும் காணப்படுகின்ற சூழல் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான நெருக்கமான உறவு ஈழத் தமிழருக்கான முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளது. இத்தகைய நிலையிலே தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம் நிகழ்ந்துள்ளது. தற்போது அமெரிக்காவில் இருக்கும் இந்தக் குழு கனடிய அரசாங்கத்தையும் பிரித்தானிய ஆட்சியாளர்களையும் சந்திக்க இருப்பதாகவும் இந்த நிபுணர் குழுவோடு இன்னொரு பாராளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் கலந்து கொள்ள இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்தக் கட்டுரையும் அமெரிக்க விஜயத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு உரையாடி வரும் விடயங்களையும் அதன் அரசியல் பெறுமானங்களை தேடுவதாகவும் உள்ளது.

அமெரிக்கா சென்றிருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்டநிபுணர் குழுவும் அதனோடு இணைந்திருக்கும் இலங்கை அரசின் கறுப்பு பட்டியலுக்கு உட்பட்ட உலக தமிழர் பேரவையின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் ஏற்பாட்டில் பல சுற்று பேச்சுகளில் ஈடுபட்டுள்ளன என்ற தகவல்கள் வெளியாகி உள்ளன. அதேநேரம் வாஷிங்டனில் நிகழ்ந்த உரையாடலை தொடர்ந்து நியூயோர்க்கில் ஐ. நா. அதிகாரிகளுடன் இந்தக் குழு கலந்துரையாட உள்ளது. இதுவரை நிகழ்ந்த அமெரிக்க இராஜாங்க திணைக்கள மட்டங்களுடனான உரையாடலை அவதானித்தல் அவசியமாகும்.

முதலாவது, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் உள்ள இரண்டாம் நிலை அதிகாரிகளுடன் ஈழத்தமிழர் தரப்பு இலங்கை தொடர்பான கொள்கை வகுப்பு நிலைப்பாடுகளையும் தீர்மானங்களையும் எடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னகர்த்தும் நோக்கில் தமிழர் தரப்புடன் பேச்சுக்களை இராஜாங்க திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. அதாவது அமெரிக்கா எத்தகைய இலங்கை பொறுத்த கொள்கைகளை வகுக்க வேண்டும் என்பது தொடர்பில் தமிழர் தரப்புடன் உரையாடிக்கொள்வதாக விளங்கிக்கொள்ள முடியும்.

இரண்டாவது, தமிழர் தரப்பு கொடுமைகளுக்கு எதிரான பொறுப்புக்கூறலை மேம்படுத்துகின்ற பூகோள குற்றங்களிலிருந்து பாதிக்கப்படுவோரை பாதுகாக்கின்ற நிலைமாறுகால நீதிப்பொறிமுறையை மேம்படுத்துகின்ற பிரிவுகளோடு உரையாடலை நிகழ்த்தியுள்ளது. அதாவது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தில் உலகளாவிய குற்றவியல் நீதிக்கான பிரிவுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்டநிபுணர் குழு உரையாடியுள்ளது.

மூன்றாவது, நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு இலங்கையில் சிறுபான்மை இனக்குழுக்களின் எதிர்பார்க்கை மற்றும் கவலைகளை செவிசாய்ப்பதோடு பூரணத்துவமான நிலைமாறுகால நீதிக்குரிய பொறிமுறையாக அரசியல் பிரதிநிதித்துவம் மற்றும் நல்லிணக்கம் குறித்து தமிழ்த்தரப்புடன் தாம் உரையாடி உள்ளதாக அமெரிக்க தரப்பு டுவிற் செய்துள்ளது.

நான்காவது, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இன்னொரு பிரிவான ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் பணியகம் தமிழ்த் தரப்போடு நிகழ்த்திய உரையாடலில் இலங்கையில் சிறுபான்மைக் குழுவின் பாதுகாப்போடு அரசியல் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துவது அமெரிக்க அரசின் முன்னுரிமை விடயமென்பதோடு இலங்கையில் தற்போது நிகழும் மனித உரிமை பிரச்னைகள் புலம்பெயர் சமூகங்களின் ஈடுபாட்டை வலுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளன என்று அமெரிக்க தரப்பு ருவிட் செய்துள்ளது.

மேற்குறித்த உரையாடல் வெளிப்படுத்தகின்ற செய்திகளை அவதானிக்கும் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு நிலைமாறுகால நீதி பற்றியும் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான உரையாடலுக்கான களத்தை மீண்டும் இலங்கை பரப்பில் திறப்பதற்கான களமாகவே அமெரிக்கா விஜயம் காணப்படுகிறது. இத்தகைய முடிவுகளுக்கான நகர்வுகளை அவதானிக்கின்றபோது இலங்கை அரசியல் பரப்பில் காணப்படும் நெருக்கடி களை அமெரிக்கா பயன்படுத்திக்கொள்வதற்கான எத்தனமும் இலங்கை அரசாங்கம் பொறுத்தான உரையாடலின் வெளிப்பாடாகவும் அத்தகைய ருவிட் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

இதுமட்டுமன்றி ருவிட் செய்யப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் அமெரிக்க தரப்பு சிறுபான்மையின குழுக்களாகவே கருத்தாட முயலுகிறது. இலங்கைத் தமிழர் ஒரு தேசிய இனம் என்ற எத்தனத்தை எந்த சந்தர்ப்பத்திலும் அமெரிக்க தரப்பு தனது ருவிட் பக்கத்தில் முதன்மைப்படுத்தவில்லை. எனவே, இவற்றினூடாக அல்லது வெளிவந்த தகவல்களினூடாக அல்லது ருவிட் செய்யப்பட்ட விடயங்களினூடாக விளங்கிக் கொள்ளக்கூடிய அடிப்படைகளாக சிலவற்றை குறிப்பிடுதல் அவசியமாகும்.

ஒன்று, அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தோடு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்டநிபுணர் குழு உரையாடும் என எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் வெளிவந்த ருவிட் தகவல்களின்படி எதனையும் கண்டு கொள்ள முடியாது. ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்னை தொடர்பிலும் அல்லது புதிதாக உருவாகவுள்ள அரசியல் யாப்பு பற்றியோ அல்லது நிபுணர் குழு உருவாக்கிய சமஷ்டி பற்றியோ உரையாடப்பட்ட கடந்த 4 நாட்களில்(14-18) 11 பிரிவுகளோடு மேற்கொண்ட உரையாடலில் வாஷிங்டனில் உரையாடிய விடயங்களில் எத்தகைய தகவலும் உச்சரிக்கப்படவில்லை. அவ்வாறாயின் அமெரிக்க நலனை இலங்கை அரசின்மீது பிரயோகப்படுத்துவதற்கான உத்தியாக இந்நிகழ்வை கண்டுகொள்ள முடியுமா என்ற கேள்வி நியாயமானதாக தெரிகின்றது. இதனூடாக தென்னிலங்கை ஆட்சியாளர்களை அமெரிக்க மற்றும் இந்திய அரசாங்கங்களோடு ஒத்துழைத்து பயணிப்பதற்கான உபாயத்தையே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு செயல்படுத்த முயன்றிருப்பது என்பது அத்தகைய கேள்வியின் நீட்சியாக உள்ளது.

இரண்டு, வரவு - செலவு திட்டத்தில் நிலைமாறு நீதிப் பொறிமுறைக்கான நிதி ஒதுக்கம் இலங்கை பாராளுமன்றத்தில் நிறைவுபெறுகின்ற சூழலில் அதற்கான உரையாடலை இராஜாங்க திணைக்களத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு உரையாடியிருப்பதும் அது பற்றிய விபரம் ருவிட் செய்யப்பட்டிருப்பதுவும் இலங்கை அரசோடு அமெரிக்க அரசின் பயணம் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை தெளிவாக்கிறது. அல்லது எதிர்காலத்தில் ஈழத்தமிழர்களின் விவகாரம் எவ்வகை எல்லைக்குள் நகர்த்தப்பட போகிறது என்பது இவ்உரையாடலில் தெரிகிறது. அவ்வாறான வடிவத்துக்குள் சட்ட நிபுணர் குழுவும் உலகத்தமிழர் பேரவையும் இணைந்து பயணிப்பதற்கான பொறிமுறையை இச்சந்திப்பு கட்டமைக்கப்பட்டிருப்பது புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களை அவர்களின் அமைப்புக்களை இலங்கை அரசின் பெயரால் கையாளப்படுகின்ற பொறிமுறையொன்று இதனூடாக நகர்த்தப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுகிறது. அதாவது இலங்கை தரப்பின் பணியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழு அமெரிக்காவுடன் இணைந்து செயல்படுத்துகிறதா என்ற சந்தேகமும் வலுவானதொன்றாக மாறுகிறது. தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் உலக தமிழர் பேரவையின் 6 பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து இருப்பது இச்சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது.

மூன்று, சமஷ்டி பற்றிய உலையாடல்களையும் புதிய அரசமைப்பு பற்றிய விடயங்களையும் உரையாடப் போவதாக அறிவித்த சட்ட நிபுணர் குழு இதுவரை (18.11.2021) உரையாடிய விடயங்களை அவதானிக்கும்போது எத்தகைய முக்கியத்துவமும் தமிழர் இனப் பிரச்னை தொடர்பாக முன்னெடுக்கப்படவில்லை என்பது தெரிகிறது. வாஷிங்டனில் உரையாடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட ருவிட் தரவுகள் அத்தகைய செய்தியை உறுதிப்படுத்தியுள்ளது. அவ்வாறாயின் சட்ட நிபுணர் குழு எதனை அடிப்படையாக கொண்டு சமஷ்டியையும் அரசியல் யாப்பையும் ஊடகப் பரப்பில் முதன்மைப் படுத்தினர். ஈழத்தமிழரின் அரசியல் எண்ணங்களில் சமஷ்டி என்பது ஆழமான முரண்பாட்டின் தீர்வுக்கான அடிப்படை என்ற நம்பிக்கை காணப்படுகிறது. தமிழ் அரசுக் கட்சியின் ஆரம்ப பெயரும் சமஷ்டிக் கட்சியாகும். அவ்வாறாயின் அதற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவிற்கு தலைமை தாங்கிய பேச்சாளரின் உரையாடல் எதற்கானது என்ற கேள்வியும் நியாயமானது.

நான்கு, ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனமென்றும் இறைமையுடைய மக்கள் என்றும் அடையாயப்படுத்தும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தாம் வெளிப்படுத்துகின்ற உரையாடலில் அதனை முதன்மைப்படுத்தாது சிறுபான்மை இனக்குழுக்கள் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ருவிட் செய்யுமளவுக்கு தமிழ்த் தரப்பின் உரையாடல் பலவீனம் தெளிவாக தெரிகிறது.

எனவே, சட்ட நிபுணர் குழுவுடன் நிகழ்ந்த உரையாடலில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டு அமெரிக்க, இந்திய நலன்களின் தேவைகளை நிறைவு செய்யும் விஜயமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சட்ட நிபுணர் குழுவின் அமெரிக்க விஜயம் அமைந்தது. அமெரிக்காவோ, இந்தியாவோ தமது நலனுக்கு உட்பட்டே உலக அரசியலை முன்னகர்த்தும் என்பது இயல்பான அதிகார அரசியலின் அளவீடாகும். ஆனால், அதற்காக தமிழ்த் தரப்பு அல்லது சட்ட நிபுணர் குழு கொடுத்த முக்கியத்துவம்தான் தமிழ் மக்களையும் புலம்பெயர்ந்த தமிழர்களையும் அதிக நெருக்கடிக்கும் அபாயமான நிலைக்கும் தள்ளியுள்ளது. இத்தகைய முக்கியத்துவமற்ற உரையாடலை நிகழ்த்துவதாலேயோ அல்லது அதற்காக ஈழத்தமிழர் அரசியலை மாற்றிக்கொள்ள முடியுமென்று வாதிப்பதையோ கருத்து நிலையாகக் கொள்ள முடியாது. போலியான முகங்களும் அதனை நியாயப்படுத்தும் அமைப்புக்களும் அதற்கு பின்னால் இயங்கும் ஊடகங்களும் அதற்கான எழுத்துக்களும் ஈழத்தமிழரின் இருப்பை கேள்விக்குறியாக்குமேயன்றி மாற்றத்தை கொண்டு வர வழி ஏற்படாது.

**நன்றி - அருவி** ■

# சிறார்களின் வாழ்வில் கொரோனா பொது முடக்கம் ஏற்படுத்திய தாக்கம் என்ன?

**ப்ரியா இராமநாதன்**



இந்த கோவிட்19 கொரோனா தொற்றின் முடக்க காலம் என்பது எம் சிறார்களின் வாழ்வில் சடுதியாக எவ்வளவு மாற்றங்களை கொண்டுவந்துள்ளது என்பது பற்றிய கலைப் படைப்புக்களின் செயற்திட் டமே 'children in lockdown 2021' எனும் கலைவிழா!

இலவசமாக பொது வெளிப் பார்வைக்கு இணையம் மூலம் கொண்டுவரப்படவுள்ள இந்த விழா. “stages theatre group” எனும் சமூக மற்றும் அரசியல் உணர்வுகளுடன் செயற்படும் ஓர் நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுளள்ளது. திரைப்பட தயாரிப்பாளர் மலித் ஹெகொட மற்றும் கலைஞரான பியூமி விஜயசுந்தர ஆகியோருடன் இணைந்து ருவந்தி மற்றும் அவரது குழுவினர், “kindernothlife” அனுசரனையுடன் கடந்த ஆறுமாத காலமாக நாடாத்திய இந்த நிகழ்ச்சியின் இறுதிக்கட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட கலைஞர்களின் டிஜிட்டல் அமர்வுகள் இம்மாதம் 26, 27, மற்றும் 28ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் இதில் குழந்தைகள் மற்றும் கலைஞர்களின் தெரிவுசெய்யப்பட்ட இருபது கலைப்படைப்புகள் வெளியிடப்படவுள்ளதாகவும் விழா இயக்குனர் பியூமி விஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் குறுந் திரைப்படங்களை தயாரித்து வெளியிடவிருக்கும் பிரபல கலைஞர்களான கிங் ரட்ணம் மற்றும் மணிவானன் ஆகியோரிடம் அவர்களது பங்களிப்புப்பற்றி வினவியபோது , "film studies with king ratnam" எனும் பெயரில் நான் நாடாத்திவரும் சினிமா பயிற்சிப்பட்டறையில் பயிலும் மாணவர்களின் பங்களிப்புடன், 2020இல் முதலாவது கொரோனா தொற்று முடக்கம் ஏற்பட்டபோது நிகழ்ந்த உண்மை சம்பவம் ஒன்றின் அடிப்படையிலேயே என்னுடைய "Unmask" எனும் இந்த குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. பெற்றோர்களுக்குள் ஏற்படும் கருத்து முரண்பாடு காரணமாக பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படுகிறார்கள் எனும் கதைக் கருவைக்கொண்ட இந்த குறும்படத்தில் நிஷால் அத்தநாயக்க மற்றும் சத்துணி மல்ஷா எனும் இரு புதிய நடிகர்களை அறிமுகப் படுத்தி இருப்பதுடன், சில புதிய யுக்திகளையும் இக்குறும் திரைப்படத்தில் கையாண்டிருக்கின்றோம்” என்றார்.

மணிவானன் கூறுகையில், ‘இந்த அமைப்பின் ஊடாக நான் இயக்குகின்ற குறுந்திரைப் படம் “தொட்டி மீன்கள்”! இக்கதையின் கருவிற்க்கான காரணமே என்னுடைய அக்காவின் மகள்தான் என்று சொல்லலாம். இப் போதெல்லாம் வீட்டினுள் இருக்கின்ற ஓர் சிறிய எல்லைக்குள்தான் அவள் விளை யாட வேண்டும் , கொரோனாவிற்குப் பின் முன்புபோல் அவளால் பாடசாலைக்கோ அல்லது வெளியிடங்களுக்கோ சென்றுவர நண்பர்களுடன் விளையாட முடிவதில்லை . முன்பென்றால், மைதானத்திற்கு சென்று அங்கு வரும் மற்றைய பிள்ளைகளுடன் சேர்ந்துவிளையாடுவதற்கான சகல வாய்ப்புக்களும் தடையின்றி அவளுக்கு கிடைத்தது.

குழந்தையான அவளது உலகிற்கு எந்தவிதத்திலும் நாங்கள் இடரின்றி இருந்தோம் . ஆனால், முடக்கம் ஏற்பட்டதிலிருந்து நிறைய விடயங்களை அவர்கள் சடுதியாக



எதிர்கொள்ளவேண்டியிருந்தது . அப்போது எனக்கு தோன்றியதெல்லாம் “விளையாட்டு” என்கிறவொன்று சிறுவர்களது உலகத்தில் எவ்வளவு பெரிய விடயம் , எவ்வளவு ஆரோக்யமான விடயமது ! ஆனால் அந்த விளையாட்டு என்கிறவொன்றுக்காக லொக்டௌனுக்குபின் இந்த பிள்ளைகள் எவ்வளவெல்லாம் அவதிப்படவேண்டியிருக்கிறது ?

இறுதியில் தானே தனியாக விளையாடும் முயற்சியை எடுக்கிறார்கள் அல்லது அதிகப்படியான நேரத்தை தொலைக்காட்சிகளிலும் , கைத்தொலைபேசிகளிலும் செலவிட முயற்சிக்கிறார்கள். எனவே இப்படியொரு பிரச்னை இருக்கிறது, இதுவும் வெளி உலகிற்கு கொண்டுவரப்பட வேண்டியதொன்று, பெற்றோர்களும் ஆசிரியர்களும் பிள்ளைகளின் இந்த நிலைமையினை புரிந்துகொள்ளவேண்டும் என்கிற அடிப்படையில் எடுக்கப்பட்ட படமே “தொட்டி மீன்கள்’ என்று கூறினார்.

இந்த செயற்திட்டத்தில் களப்பணியாற்றிய, வேலுசாமி வீரசிங்கம், இச் செயற்திட்டத்தில் தனது அனுபவம் பற்றிக் கூறுகையில் , “குடும்பங்களில் உள்ள தந்தையர்களிடத்தே ஓர் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கிலேயே, தான் இதில் பணியாற்றியதாக குறிப்பிட்ட அவர், நம்முடைய சமூக அமைப்பில் உள்ள குடும்பங்களைப் பொறுத்தவரையில் குழந்தை வளர்ப்பில் தந்தைமாரின் பங்களிப்பு மிகவும் அரிதானதே. அதிலும் லொக்டௌன் காலத்தில் இந்த பிரச்சினை மென்மேலும் அதிகமானது என்று கூட சொல்லலாம் . வீட்டு வேலைகள் , குழந்தைகளின் பராமரிப்பு என்பவை சரியான முறையில் பகிர்ந்துகொள்ளப்படாவிடின் ஏற்படும் சிக்கல்கள், சரியான புரிந்துணர்வுடன் ஒரு தந்தையை அவற்றில் ஈடுபட வைப்பது, அதன் மூலம் ஒரு வீட்டில் ஏற்படும் மகிழ்ச்சி மற்றும் குழந்தைகளுடன் நேரத்தை செலவிட தந்தையர்கள் முன்வரும் போது ஏற்படும் பிள்ளைகளுக்கும் தந்தைக்குமான மேலதிக நெருக்கம் போன்றவை பற்றி கலந்துரையாடப்பட்டது . இந்த நோக்கத்திற்காக யாழ்ப்பாணம் , கண்டி போன்ற பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட தந்தையர்களுடனும் ஆசிரியர்களுடனும் இணைந்து ஒன்லைன் பயிற்சிகள் எங்களால் நடாத்தப்பட்டது என்றார் .



இந்த கலைவிழாவில் ராசையா லோகநாதன் மற்றும் லீலா தம்பதியினர் அவர்களது “அரங்கத் தோழர்கள் கலை கழகம்” எனும் மேடை நாடக குழுவினருடன் இணைந்து வழங்கும் “பிள்ளைகளே எழுவீர்” எனும் மேடைநாடகத்தின் தோற்றம் பற்றி லீலாவிடம் வினவிய போது, கிட்டத்தட்ட பதினாறு வருடங்களாக மேடைநாடகங்களில் ஈடுபட்டு வரும் நாங்கள் எங்களுக்கு கிடைத்த இந்த வாய்ப்பினை சிறுவர்களது பிரச்னைகளை வெளிக்கொணரும்வகையில் பயன்படுத்திக்கொண்டுள்ளோம் .

முடக்க காலத்தில் நாமெல்லாம் பொருளாதாரம் உற்பட நிறைய விடையங்கள் பற்றி பேசிக்கொண்டேயிருக்கின்றோம் ஆனால், வீட்டில் இருக்கும் நம் சிறுவர்களது மனநிலை என்ன ? அவர்களது பிரச்னை என்ன? என்பது பற்றி சிந்தித்திருக்கின்றோமா ? நாங்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றோம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதால் அவர்கள் எல்லோரும் வீட்டில் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்று. ஆனால் அவர்களது ஆசைகள், எதிர்பார்ப்புக்கள், பிரச்னைகள் போன்றவற்றை அவர்களது கோணத்திலிருந்து பார்க்காத தவறிவிடுகின்றோம் , எனவே மேடை நாடகம் என்பது எமக்கு மிகவும் பரிச்சயமான ஓர் ஊடகம் என்பதால் இதுபற்றி நாடகவடிவில் வெளிக் கொணர வேண்டும் என முடிவெடுத்தோம் . அதிலும் குறிப்பாக மலையக சிறார்களின் பிரச்னைகளை முன்வைக்க முயன்றிருக்கின்றோம். நாங்கள் பிறந்து வளர்ந்ததும் ஹட்டன் பொகவந்தலாவையில் என்பதால் இதனை நாம் பிறந்த சமூகத்திற்கு செய்யும் கடமைப்பாடாக நினைக்கின்றோம் எனக்கூறிய லீலா, தான் சந்தித்த சிறுவர்களது உள்ளக் குமுறல்களைப் பற்றியும் எம்மோடு பகிர்ந்துகொண்டார்.

குழந்தைகள் மற்றும் பிற கலைஞர்களால் உருவாக்கப்பட்ட இருபது வெவ்வேறு கலைப்படைப்புகள் (குறுந்திரைப் படங்கள், பொம்மலாட்டம் , மேடை நாடகங்கள், கலைஞர்களின் அனுபவத் பகிர்வுகள் ) அனைத்தும் நவம்பர் 26,27,28 ஆம் திகதிகளில் “2021இல் லொக்டௌன் கலைவிழா” எனும் தலைப்பில் ஒன்லைன் அமர்வுகளின் போது முதல்முறையாக பொதுவெளியில் (zoom) வெளியிடப்படவுள்ளன. Youtube மற்றும் facebook நேரலையில் ஒளிபரப்பப்படும் இதில் இணைந்துகொள்ள விரும்புவோர் தரவிறக்கத்திற்கு பதிவுசெய்யவேண்டிய இணைய முகவரி (பதிவு இலவசம்) மற்றும் மேலதிக தகவல்களுக்கு

**www.stages.lk/arts-festival**

## 3 நாள் இணைய வழி கலை விழாவில் வெளிவரவிருக்கும் குறும் படங்கள்





# போர்க் குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் மனவலியை காட்டும் தொடர்

# Black Earth Rising

ரமணன்

கறுப்பு-வெள்ளை கார்ட்டூன் காட்சியில் ஒரு ஆப்பிரிக்க சிறுமி பிணக் குவியலில் இருந்து காப்பாற்றப் படுகின்றாள். அந்த சிறுமி “கேட்” வளர்ந்து இங்கிலாந்தில் ஒரு ஆய்வாளராக வருகின்றார். ஆனால், தான் காப்பாற்றப்பட்டதால் ஏற்படும் குற்ற உணர்வினால் (Surviors guilt) அவதிப்படுகின்றாள். அவளின் வளர்ப்புத் தாயாரான “ஈவ்” அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக தொழில் புரிகின்றார்.

ருவாண்டாவில் போரை நிறுத்திய கொங்கோ நாட்டை சேர்ந்த “நயமோயா” என்ற ஆயுதக் குழுத் தலைவர் கைதாகின்றார். ருவாண்டாவில் நடந்த போர்க் குற்ற இனப் படுகொலை விசாரணையை ஈவ் கையில் எடுக்கின்றார். நயமோயாவை கேட் ஒரு போரை நிறுத்திய தலைவனாக பார்க்கின்றாள். அவளது தாயாரான ஈவ் நயமோயாவை ஒரு இனப் படுகொலை புரிந்த போர் குற்றவாளியாக பார்க்கின்றாள். அதனால் தாய்க்கும் மகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்படுகின்றது. இந்த உறவு சரியாகுமா? இல்லை அனைத்துலக போர்க் குற்ற விசாரணை நடக்குமா? என்பதை விறுவிறுப்புடன் கூறும் Netflix தொடரே 'Black Earth Rising'

ருவாண்டா நாட்டில் ஹூட்டு, டூட்சி, த்வா என்ற இனக் குழுக்கள் வாழ்கின்றன. ஹூட்டு இனம் பெரும்பான்மையான நாட்டில் சிறுபான்மை இனத்தவர்கள் நசுக்கப்படுகின்றனர். அதனால் டூட்சி இனத்தவர்களை கொண்ட படையான ருவாண்டா தேசபக்த முண்ணனி (RPF) அந்தக் கால கட்டத்து ருவாண்டா அரசை எதிர்த்து போராடுகின்றது. 1994 ஆம் ஆண்டில் டுட்சி இனத்தவர்கள் பல லட்சக் கணக்கில் (8-10) கொல்லப்பட்டனர். RPF கிகாலி தலைநகராக கொண்ட ருவாண்டா அரசை கைப்பற்றுகின்றது.

ஆட்சி கவிழ்ந்த ஹூட்டு அரசியல் பிரமுகர்கள் ஹூட்டு மக்களுடன் மக்களாக கொங்கோ நாட்டுக்கு தப்பி சென்று- அங்கிருந்து ருவாண்டா எல்லையில் கிளர்ச்சியை ஏற்படுத்துகின்றனர். இதனை RPF, கொங்கோ நாட்டில் இருக்கும் டுட்சி இன சார்பான ஆயுதக் குழுக்களை துணை கொண்டு அடக்குகின்றனர்.

இதன் காரணமாக முதலாவது கொங்கோ போர் வெடிக்கின்றது. அதனால் 1996 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சத்துக்கும் அதிக மான ஹூட்டு இனத்தவர்கள் கொல்லப்படுகின்றனர். இந்த வரலாற்று பின்னணியே தொடரின் மையக் கருவாகும்.

அந்த வகையில் விசாரணையில் சாட்சியாக இருக்கும் ஊமை சைகையால் தனக்கு நடந்த கொடுமையையும் தான் பார்த்த மனித பேரவலப் படுகொலைகள் தொடர்பாக விபரிக்கும் போது அது கறுப்பு-வெள்ளை கார்ட்டூனாக சித்தரிக்கப்படுகின்றது. அந்த காட்சியினை பார்க்கும் போது அச்சத்தினை ஏற்படுத்தியது. “ஊமையான என்னை ஏன் பேச வைக்கின்றீர்கள்” என்று அவள் கேட்க “சில நேரம் வார்த்தைகள் கூட தோற்கும்” என்று சட்டத்தரணி கூறுவது நெகிழ வைத்தது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று கூறுவார்கள். அந்த வகையில் தொடரில் பிரான்ஸ், அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் எவ்வாறு போர்க் குற்ற விசாரணயில் தாக்கம் செலுத்துகின்றன என்பதும், அந்தப் போரில் அவர்களது குடிமகன்(ள்) கொல்லப்பட்டால் அந்த விசாரணை எவ்வாறு இருக்கும் என்பதையும், அனைத்துலக குற்றவியல் விசாரணை என்றால் எவ்வாறு இருக்கும் என்பதை யும், ஒரு அனைத்துலக போர்க் குற்ற விசாரணையை வளர்ந்து வரும் நாடு ஒன்றில் நடத்த வேண்டும் என்றால் என்னவெல்லாம் பகீரதப் பிரயத்தனம் செய்ய வேண்டும் என்பதையும் பல்வேறு கதாபாத்திரங்களூடாக அழகாக புரிய வைக்கின்றனர்.

எமக்கு சிங்கம் - 2 திரைப்படத்தில் வில்லனாக பரிச்சயமான டானி சாபானி ஜெனரல் நயமோவாக நடித்துள்ளார். கேட் ஆஸ்பியாக நடிக்கும் மிச்சேலா கோஹெல், காப்பாற்றப்பட்டதால் ஏற்படும் குற்ற உணர்வினால் அவதிப்படும் போதும், தன் மனதில் வடுக்களை ஏற்படுத்திய இடங்களை பார்க்கும் போதும் வேதனையை வெளிப்படுத்தும் விதத்திலும், தான் ஒரு டுட்சியா? ஹூட்டுவா? என குழம்பும் போதும், நடிப்பில் மிளிர்கின்றார்.

RPF ஆட்சிக்கு வந்த பின்னர் ருவாண்டாவில் தலைமைத்துவத்தில் இதுவரை மாற்றம் வரவில்லை. சிறுவர் போராளிகள், கனிம வள சுரண்டல், அந்த பிராந்தியத்தில் இருக்கும் நாடுகளில் தேவாலயங்களின் தாக்கங்கள், அனைத்துலக விசாரணைகள் நலிந்த ஆப்பிரிக்க நாடுகளின் குற்றங்களை குறியாக கொண்டு நடத்தப்படுவதில் உள்ள அரசியல், காலனித்துவத்தின் வடுக்களை ஆப்பிரிக்கர்களில் ஏற்படுத்திய தாக்கம், என ஆப்பிரிக்க தொடர்பான அரசியலும் பேசுகின்றது.

இந்த தொடரை உணர்வுபூர்வமாக பார்க்க ருவாண்டாவின் வரலாறு தொடர்பான சிறு அறிமுகம் தேவை என்பதும், விறுவிறுப்பை அதிகரிப்பதற்காக ஆங்காங்கே உட்புகுத்தப்பட்ட அதிரடி காட்சிகளை விட இன்னும் கூட போர்க் குற்ற விசாரணை மற்றும் போர் வடுக்களை கொண்ட மனிதர்களின் உணர்வில் மேலும் கவனம் செலுத்தி இருக்கலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

போர்க் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் மனவலியையும், அனைத்துலக போர்க்குற்ற விசாரணை பொறிமுறையும், அதில் இருக்கும் அரசியல் காய் நகர்த்தங்களையும் கதாபாத்திரங்கள் ஊடாக பார்த்து விளங்கிக் கொள்ள Black Earth Risining பார்க்கலாம்.

உங்கள் கருத்துக்களுக்கு: **ramaniwrites@gmail.com**



# திரை விமர்சனம்




**திரைப்படம் : ஜாங்கோ**
**இயக்கம் : மனோ கார்த்திகேயன்**
**இசை : ஜிப்ரான்**
**நடிப்பு : சதீஷ்குமார், மிர்ணாளினி ரவி, கருணாகரன் மற்றும் பலர்**

**ரைம்** லூப் என்ற அடிப்படையில் வெளிவந்துள்ளது இந்தப் படம். ரைம் லூப் என்பது ஒரு சதி சாதனமாகும். கதாபாத்திரங்கள் மீண்டும் மீண்டும் ஒரு கால இடைவெளியை அனுபவிப்பதாகும். படத்தின் கதை, நாயகன் தூங்கி எழும் காலை 7 மணி முதல் நள்ளிரவு வரை நடந்த விடயங்களே திரும்பத் திரும்ப 17 நாட்கள் நடக்கிறது. அது ஏன் நடக்கி றது, எதற்காக நடக்கிறது என்பதை அவர் எப்படிக் கண்டுபிடித்தார், அதற்கு என்ன முடிவுரை எழுதி னார் என்பதுதான்.

அறிமுக இயக்குநர் மனோ கார்த்திகேயன் முதல் படத்திலேயே சிக்கலுக்குரிய கதையை எடுத்துக் கொண்டு அது பாமரருக்கும் புரியும் விதத்தில் சிக்கல் இல்லாமல் கொடுக்க முயற்சித்திருக்கிறார். மிகக் கடினமான இந்தப் பணியை இயக்குநர் தெளிவாகவே செய்திருக்கிறார்.

படத்தின் அறிமுக நாயகன் சதீஷ்குமார் மூளை அறுவை சிகிச்சை செய்யும் சிறந்த மருத்துவர். தொலைக்காட்சியில் தொகுப்பாளராக வேலை பார்க்கும் மிர்னாளினி ரவியைத் திருமணம் செய்கிறார். அதன்பின் பிரச்னை வர இருவரும் பிரிகிறார்கள். இருந்தாலும் பிரிந்த மனைவி மீது பாசமாக இருக்கிறார் சதீஷ். ஒரு நாள் திடீரென ரைம் லூப்பில் சிக்கிக் கொள்கிறார். அவரின் முன்னாள் மனைவியான மிர்னாளினியை யாரோ கொலை செய்கிறார்கள். அடுத்த லூப் நாட்களில் மனைவி மிர்ணாளினியைக் காப்பாற்ற முயற்சிக்கிறார். அந்த முயற்சியில் அவர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

கணவன் - மனைவி இடையிலான குடும்பக் கதை, ரைம் லூப் என்ற உளவியல் சார்ந்த, வேற்று கிரக கலன் வருகை, செயற்கை இதயம் என்ற மருத்துவ ஆராய்ச்சி, மனைவி கொலை, அதைக் காப்பாற்ற எடுக்கும் முயற்சி என த்ரில்லர் இப்படி ஒரு படத்திலேயே பல விசயங்கள் படத்தில் உள்ளன.

அறிமுக நாயகன் சதீஷ்குமார் முதல் படத்திலேயே இப்படி ஒரு சவாலான கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருப்பது ஆச்சரியம்தான். முடிந்த வரையில் தன் கதாபாத்திரத்திற்கு உயிர் கொடுத்து நடித்திருக்கிறார். நாயகி மிர்னாளினிக்கு அதிக வேலையில்லை. எப்போது சதீஷைப் பார்த்தாலும் கோபப்படுவதும், வெறுப்பாக பேசுவது மட்டுமே அவருக்கான வேலை.

யார் வில்லன் என்பது படத்தில் இருக்கும் பெரிய சஸ்பென்ஸ். அது கடைசியாகத்தான் தெரிய வருகிறது. அதில், வேலு பிரபாகரன் சிறப்பாக நடித்துள்ளார்.

ஜாங்கோ மிஷின், வேற்று கிரக கலன், செயற்கை இதய உருவாக்கம் என தரமான கிராபிக்ஸ் காட்சிகள் படத்திற்குக் கொஞ்சம் பலம் சேர்க்கின்றன. உருவாக்கத்தில் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தி பிரம்மாண்டமாக படமாக்கி இருக்கலாம்.



## மாலைதீவில் பூஜா

முன்னணி நடிகைகள் பலரும் மாலைதீவுக்கு சுற்றுலா செல்வதை அண்மைக்காலமாக வழக்கமாக வைத்துள்ளனர். அவர்கள், மாலைதீவில் தாங்கள் எடுத்த படங்களை சமூகவலைத்தளங்களில் ரசிகர்களுக்கு விருந்தாக்குவது வழக்கம்.

இந்தப் படங்கள் அதிகம் நீச்சலுடை படங்களாக அமைவதே வழக்கம். இந்த வரிசையில், இறுதியாக இப்போது இணைந்திருப்பவர் பூஜா ஹெக்டே. பீஸ்ட் படத்தின் நாயகியான அவர் பதிவிட்ட படங்கள்தான் சமூகவலைத்தளங்களில் கடந்த வாரம் பிரபலம்.

தனது நீச்சலுடை படங்களுடன், “சாதாரண ஒரு பெண், அசாதாரணமான அனுபவத்தைப் பெற காத்திருக்கிறார்,” என்றும் அவர் பதிவிட்டுள்ளார்.



## நிர்வாணமாக நடிக்க வரவில்லை!

கபாலி படம் மூலம் தமிழில் பிரபலமானவர் ராதிகா ஆப்தே. ஒரு படத்தில் நிர்வாணமாக நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார்.

இந்நிலையில் அண்மையில் அவர் அளித்த பேட்டி ஒன்றில், என்னை ஓர் இயக்குநர் விலைமாது கதாபாத்திரத்தில் நடிக்க கேட்டார். ஏன் இதுபோன்ற கதைகளுடன் வருகிறீர்கள் என்று கேட்டேன்.

நீங்கள் பட்லாபூர், அகல்யா போன்ற படங்களில் கவர்ச்சியாக நடித்ததுடன், ஏற்கனவே நிர்வாணமாகவும் நடித்துள்ளீர்கள் அல்லவா என்றார். இது எனக்கு அதிர்ச்சியளித்தது.

நான் நிர்வாணமாகவோ கவர்ச்சியாக நடிக்கவோ திரைத்துறைக்கு வரவில்லை. கதைக்கு தேவை என்றால் பிடித்திருந்தால் எவ்வளவு தூரம் வேண்டுமானலும் நடிப்பேன். கதையே இல்லாமல் உடம்பை காட்டவோ, நிர்வாணமாக நடிக்கவோ மாட்டேன் - என்றார்.

## ஒரு பாடலுக்கு ஆட்டம்

முன்னணி நாயகியான சமந்தா தமிழை விட தெலுங்கில்தான் அதிக வெற்றிப் படங்களில் நடித்துள்ளார். அதிலும், சசிகுமாரின் இயக்கிய பல படங்களிலில் அவர் நடித்துள்ளார்.

இந்நிலையில், சசிகுமார் இயக்கி வரும் புஷ்பா படத்தில் ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாட அவர் சம்மதித்துள்ளார். நட்புக்காகவே அவர் ஒரு பாடலில் ஆடுவதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்.

இதற்காக சமந்தா ஒன்றரை கோடி இந்திய ரூபாயை சம்பளமாக பெறவுள்ளார். அத்துடன் படுகவர்ச்சியாக நடனமாடவும் சம்மதித்துள்ளார் என்று கூறப்படுகிறது.



## நயனுக்கு பதில் ஷ்ரத்தா

வடிவேலு நாயகனாக நடித்த தெனாலிராமன், எலி படங்களை இயக்கியவர் யுவராஜ் தயாளன். இவரின் புதிய படத்தில் நயன்தாரா நாயகியாக நடிக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால், தற்போது நயன்தாரா விலகிவிட்டார். இந்த நிலையில் அவருக்குப் பதிலாக ஷ்ரத்தா ஸ்ரீநாத் நடிக்கவுள்ளார் என்று கூறப்பட்டது.


அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடிக்கும் பொலிவூட் படத்திற்கு திகதிகள் வழங்குவதற்காகவே இந்தப் படத்திலிருந்து நயன்தாரா விலகினார் என்று கூறப்படுகின்றது. ஷ்ரத்தா ஸ்ரீநாத்.



## ஆர்யாவின் ‘கேப்டன்’

நடிகர் ஆர்யா நடிப்பில் - சக்தி சௌந்தர்ராஜன் இயக்கத்தில் வெளிவந்து வெற்றி பெற்ற படம் டெடி. இதையடுத்து இந்தக் கூட்டணி மீண்டும் இணைவதாக அறிவிக்கப்பட்டது.

தற்போது இருவரும் இணைந்து படப்பிடிப்பும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. ஆர்யாவின் 33ஆவது படமாக தயாராகி வரும் இந்த படத்திற்கு இப்போது ‘கேப்டன்’ என பெயரிட்டுள்ளனர். இமான் இசையமைக்கிறார். தமிழ், தெலுங்கில் இந்த படம் வெளியாக உள்ளது.



# எழுச்சியிலும் தோல்வி



இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் இரு அணிகளுமே முன்னதாக இருபது - 20 உலகக் கிண்ணத்தை வெற்றி கொண்ட அணிகள். இந்த இரு அணிகளுமே அடுத்த ஆண்டு நவம்பரில் நடக்கவுள்ள இருபது - 20 உலகக் கிண்ணப் போட்டியில் தகுதி சுற்றுக்கு தள்ளப்பட்டுள்ளன. இது நியாயமா என்பதே இன்றைய கிரிக்கெட் உலகினரின் கேள்வியாக உள்ளது.

ஐ. சி. சி. தரவரிசைப்படியே உலகக் கிண்ணத்தில் ஆடும் தகுதியை அணிகள் பெறுகின்றன. இதன்படி, கடந்த நவம்பர் 15 ஆம் திகதியில் தரவரிசையில் முதல் 8 இடமங்களை பிடித்த அணிகள் தான் உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றுக்கு நேரடியாக தகுதி பெற்றன. ஏனைய அணிகள் தகுதி சுற்று மூலம்தான் நுழைய முடியும். இதன்படி, இப்போது இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் சுப்பர் 12 சுற்றில் நேரடியாக தகுதி பெறமுடியாமல் தகுதி சுற்றில் ஆடவேண்டிய நிலை எழுந்துள்ளது.

இந்த இரண்டு அணிகளும் இந்த உலகக்கிண்ணத்தில் சுப்பர் 12 சுற்றுடனேயே தங்கள் பயணத்தை முடித்துக் கொண்டன. இதனால், தரவரிசையில் முன்னேற வாய்ப்பில்லாமல் போனது. இதனால், அடுத்த ஆண்டு ஐ. சி. சி. உறுப்பு நாடுகளுடன் இந்த நாடுகள் தகுதி சுற்றில் விளையாடியே ஆகவேண்டும்.

இருபது - 20 உலகக்கிண்ணத்தை வென்று சம்பியனான இரண்டு அணிகள் இப்படி தகுதிச் சுற்றுக்கு தள்ளப்படுவது நியாயமா எனும் கேள்வி பலருக்கும் எழுந்துள்ளது.

ஏனெனில், இம்முறை உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளை விட பங்களாதேஷ் மோசமான தோல்விகளை தழுவியது. ஆனால், அந்த அணி நேரடியாக சுப்பர் 12 சுற்றுக்குள் நுழைந்து விட்டது. இதேநேரத்தில், இலங்கை அணி தகுதிச்சுற்றில் ஆடிய 3 போட்டிகளில் வென்றதுடன், சுப்பர் 12 சுற்றிலும் ஆடிய 5 போட்டிகளில் 2இல் வென்றிருந்தது. இதேபோல, மேற்கிந்தியத் தீவுகள் அணியும் ஆடிய 5 போட்டிகளில் ஒரு போட்டியில் வென்றிருந்தது.

மிக மோசமாக ஆடிய பங்களா தேஷால் அடுத்த உலகக் கிண்ணத் துக்கு நேரடியாக தகுதிபெற முடிகிறது. ஆனால், போராடி வீழ்ந்த இலங்கையும் ஆறுதல் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகளும் உறுப்பு நாடுகளின் அணிகளுடன் மல்லுக்கட்ட வேண்டியிருக்கிறது.

இரு நாட்டு தொடர்களில் கடந்த காலங்களில் மோசமான தோல்விகளை சந்தித்த இலங்கை அணி, உலகக் கிண்ணத் தொடரில் காட்டிய முனைப்பும் - போராட்ட குணமும் மற்றைய அணிகளை விட அதிகம். அடுத்த உலகக் கிண்ணத் துக்கு இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. சிறு எழுச்சியை கண்டிருக்கும் இலங்கை இந்த இடைப்பட்ட இடைவெளியில் வெற்றிகளை குவிக்கலாம். வீழ்ச்சி பாதையில் இருக்கும் பங்களாதேஷ் இன்னும் சறுக்கலாம். ஆனால், ஐ. சி. சி அதெல்லாம் தனக்கு முக்கியமில்லை. என்பது போல், நவம்பர் 15ஆம் திகதி முதல் 8 இடங்களில் இருக்கும் அணிகளே சுப்பர் 12இற்கு தகுதி பெறலாம் என்கிறது.

எனவே, இந்த தகுதி முறை மாற்றியமைக்கப்பட வேண்டும் என்கிறார்கள் இலங்கையின் ரசிகர்கள் மட்டுமல்ல உலக கிரிக்கெட் ரசிகர்களும்தான்.



# ரொனால்டோ இல்லாத உலகக்கிண்ணம்?

போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பன் நகரில் நடைபெற்ற உலகக் கிண்ண தகுதி சுற்றின் கடைசி போட்டி யில் போர்த்துக்கல் சேர்பியாவிடம் இறுதி நிமிடத்தில் தோல்வியடைந்தது. இதனை உதைபந்தாட்ட ரசிகர்களால் நம்ப முடியவில்லை.

முக்கியமான போட்டிகளில் இறுதி நேரத்தில் கோல் அடித்து அணியை காப்பாற்றும் நட்சத்திர வீரர் கிறிஸ்ரியனோ ரொனால்டோவால்கூட ஒன்றும் செய்ய இயலவில்லை. இந்தத் தோல்வியால், அவர் தன்னுடைய இறுதி உலகக் கிண்ணத்தில் - 5ஆவது முறையாக பங்கேற்கும் வாய்ப்பு தற்போது சிக்கலாகியுள்ளது. இது கிறிஸ்ரியனோ ரொனால்டோ ரசிகர்கள், போர்த்துக்கல் ரசிகர்களுக்கு மத்தியில் மட்டுமில்லாமல், ஒட்டுமொத்த உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு இடையேயும் கலக்கத்தை உருவாக்கியுள்ளது.

உலகின் தலைசிறந்த வீரரான கிறிஸ்ரியானோ ரொனால்டோ அடுத்த வருடம் மார்ச் மாதம் நடைபெறும் உலகக் கிண்ண பிளே ஒவ் சுற்றில் தகுதி பெற்று 2022 கட்டாரில் நடக்கும் உலகக் கிண்ணத்தில் பங்கேற்க வேண்டும் என்பதே ஒட்டுமொத்த உதைபந்தாட்ட ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. என்ன நடக்கிறது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

# ஷூவே எங்கே...?

சீனாவின் முக்கிய அரசியல் பிரமுகர்மீது பாலியல் குற்றச்சாட்டு தெரிவித்த ரென்னிஸ் வீராங்கனை பங் ஷூவேயை காணவில்லை என்ற செய்தி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. பாலியல் தொல்லை பற்றி பொதுவெளியில் சொன்ன பிறகு அவர் எங்கே இருக்கிறார், என்ன செய்கிறார் என்பது பற்றி யாருக்கும் தெரியாததால், அவரின் பாதுகாப்பு குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

சீனாவைச் சேர்ந்த ரென்னிஸ் வீராங்கனை பங் ஷூவே. 35 வயதான இவர், இரட்டையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீராங்கனையாக இருந்தவர். இரு இரட்டையர் கிராண்ட்ஸ்லம் பட்டங்களும் வென்றிருக்கிறார். கடந்த ஆண்டு நடந்த கட்டார் ஓப்பனோடு, ரென்னிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். இந்நிலையில், 2 வாரங்களுக்கு முன்பு சீன சமூக வலைதளமான வெய்போவில் சுமார் 1500 வார்த்தைகளில் ஒரு பதிவிட்டிருந்தார் ஷூவே. அதில், சீனாவின் முன்னாள் வைஸ் பிறிமியரான ஜென் ஜெயலாய் தன்னை பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கினார் எனக் கூறியிருந்தார்.

அந்தப் பதிவில் தன்னை ஜெயலாய் எப்படியெல்லாம் துன்புறுத்தினார் என்பதை வெளிப்படையாகச் சொல்லியிருந்தார் ஷூவே. ”நான் இன்னும் உயிரோடு இருக்கிறேனா என்பதை அடிக்கடி நானே கேட்டுக்கொள்கிறேன். நடந்துகொண்டிருக்கும் சவம் போல் உணர்கிறேன்” தன் வேதனையை வெளிப்படுத்தியிருந்தார்.

ஜென், சீனாவில் 2013 - 2018 வரை வைஸ் பிறிமியராக இருந்தவர். இந்தப் பதவி சீன ஜனாதிபதி பதவிக்கு அடுத்துள்ள பதவியாகும். இத்தகைய




அரசியல் பிரமுகர்மீது... அதுவும் சீனாவில் ஒரு பெரிய வகித்தவர் மீது குற்றம் சுமத்துவது எப்படியான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஷூவே அறிந்திருக்கிறார். அதனால், “ஒரு பாறையில் மோதும் முட்டையைப் போல், நெருப்பின் மீது பாயப்போகும் அந்துப்பூச்சியைப்போல், இது என்னையே அழிக்கக்கூடும் என்று தெரிந்தாலும், நான் உண்மையைச் சொல்வேன்” என்று தைரியமாக அந்தப் பதிவில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தப் பதிவு சீனாவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ருவிட்டர் போன்ற வலைத்தளமான வெய்போவிலிருந்து அடுத்த 20 நிமிடங்களிலேயே அந்தப் பதிவு அகற்றப்பட்டது. ஆனால், அதற்கு முன்பாக ஸ்க்றீன் ஷொட் எடுக்கப்பட்டதால், அது மேலும் அதிகம் பகிரப்பட்டது. சீனாவில் சமூக வலைத்தளங்களை அரசு சென்ஸார்ஷிப் செய்வதால், பங் ஷூவேவின் பெயர், ரென்னிஸ் என்ற வார்த்தைகள்கூட இணையத்தில் முடக்கம் செய்யப்பட்டன.

ஒரு சீன அரசியல் பிரமுகர்மீது இப்படியொரு குற்றச்சாட்டு எழுவது அங்கு சாதாரணமானதல்ல. இரும்புக்கரம் கொண்ட சீன அராசாங்கம் அதற்குத் துளியும் இடம் கொடுப்பதில்லை. ஷூவே ஒரு பிரபல ரென்னிஸ் வீராங்கனை என்பதால் இந்த விசயம் உலக ஊடகங்களின் கண்களில் பட்டுவிட்டது. ஆனால், இப்போது ஷூவே யார் கண்களிலும் படவில்லை.

அவரை தொடர்பு கொள்ள பலரும் முயற்சித்தபோதும், அவரை தொடர்பு கொள்ள முடியவில்லை என்று உலக பெண்கள் ரென்னிஸ் சங்கத்தின் தலைவர் ஸ்டீவ் சைமன் தெரிவித்தார்.

இந்த நிலையில், அவருக்கு ஷூவேயின் பெயரில் ஒரு மின்னஞ்சல் கிடைத்தது. அதில், “நானொன்றும் காணாமல் போகவில்லை. என் வீட்டில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. இதற்குமேல் என்னைப் பற்றி ஏதேனும் செய்தி வெளியிடுவதானால் முதலில் என்னிடம் உறுதிபடுத்துங்கள்” என்று அதில் கூறப்பட்டது.

ஆனால், இந்த மின்னஞ்சல் அவர் அனுப்பியதாக இருக்காது என்று தெரிவித்திருக்கிறார் சைமன். அவர் பாதுகாப்பாக இருக்கிறார் என்பதை நாம் உறுதிப்படுத்த வேண்டும். சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால் 2022இல் சீனாவில் நடத்தவிருக்கும் 10 தொடர்களையும் நிறுத்துவோம் என்று எச்சரித்துள்ளார் சைமன்.

ஷூவேவின் பிரச்னை குறித்து பல விளையாட்டு நட்சத்திரங்களும் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டுவருகின்றனர். செரீனா வில்லியம்ஸ், நயோமி ஓசாகா போன்ற ரென்னிஸ் வீரர்கள் மட்டுமல்ல, ஏனைய விளையாட்டு பிரபலங்களும் அவர் தொடர்பில் கேள்வி எழுப்பி வருகின்றனர்.



# கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் வழங்கும் விருதுகள் அறிவிப்பு:

கனடா நாட்டில் 2001 முதல் இயங்கிவரும் தமிழ் இலக்கியத் தோட்டம் அமைப்பு உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளையாகும்.

அரிய தமிழ் நூல்களைப் பதிப்பிப்பது, தமிழ் ஆங்கில நூல்களை மொழிபெயர்ப்பு செய்வதை ஊக்கப்படுத்துவது, மாணவர் கல்விக்கு உதவித்தொகை வழங்குவது, கனடிய நூலகங்களுக்கு இலவசமாகத் தமிழ் நூல்கள் அளிப்பது போன்ற இதன் சேவைகள் பலவகைப்பட்டதாகும். அதுமட்டுமல்ல ஆண்டுதோறும் தமிழுக்குப் பல துறைகளில் சேவை புரிந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவித்தும் வருகிறது.

சர்வதேச அளவில் வழங்கப்படும் இந்த விருது உலகமெங்கும் உள்ள தமிழர்கள் மத்தியில் கௌரவம் மிக்கதாகவும் பெருமைக்குரியதாகவும் மதிக்கப்படுகிறது.

உலகெங்கிலுமுள்ள தமிழர்களில் தமிழுக்குப் பல்வேறு துறைகளில் சேவைசெய்து முத்திரை பதித்தவர்களில் தகுதியான ஐந்து பேர், கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் சார்பில் வழங்கப்படும் விருதுக்குத் தேர்வுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மதிப்புமிக்க விருதுக் கேடயமும் 500 கனடியன் டொலர் பரிசுத் தொகையும் விருதுடன் வழங்கப்படும்.

அவ்வகையில் 2021ஆம்ஆண்டு விருதுக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள ஐந்து தமிழர்கள் பற்றிய குறிப்புகள் வருமாறு:

### கவிதை விருது: பெருந்தேவி

கவிதை விருது பெறும் பெருந்தேவி தமிழகத்தின் கும்பகோணத்தைச் சேர்ந்தவர். தமிழ் நவீன கவிஞராகவும், எழுத்தாளராகவும் 1990 களிலிருந்து இயங்கி வருகிறார். இதுவரை இவருடைய 9 கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. இவர் பரிசோதனை ரீதியான கவிதை முயற்சிகளில் ஈடுபட்டு வருவதுடன் பல ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தனித்துவமான கவிமொழி கொண்ட இவர், கவிஞர்களில் தனித்துத் தெரிகிறார். இவரது ஆங்கில மொழிபெயர்ப்புக் கவிதைகளும் வெளிவந்திருக்கின்றன. இவர் தற்சமயம் நியூயார்க் மாகாண சியானா கல்லூரியில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார்.

### புனைவு விருது : பா.கண்மணி

தன் “இடபம்” என்கிற நாவல் மூலம் பரவலாக அறியப்பட்ட கண்மணி புனைவு விருது பெறுகிறார். இவர் தஞ்சாவூர் மாவட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வங்கிப் படிப்பை முடித்து வங்கியில் வேலை பார்த்தவர். பின்னர் விருப்ப ஓய்வு பெற்றபின் தீவிர வாசிப்பை மேற்கொண்டவர். சிறுகதைகளும், குறுநாவலும் எழுதியுள்ளார். கால்நூற்றாண்டு காலமாக பங்குச்சந்தை வணிக அனுபவமும், கூர்மையான அவதானிப்பும் 'இடபம்'என்ற நாவலை எழுதத் தூண்டியது. இதற்கு முன் எவரும் சொல்லத் துணியாத துறையில் இறங்கி புதிய சொல்முறையில் உருவாக்கிய இந்த நாவல் இலக்கிய மதிப்பில் உயர்ந்து நிற்கிறது. அதற்காக இவ்விருதைப் பெறுகிறார்.

### இலக்கிய சாதனை சிறப்பு விருது: பி.ஜெ.திலிப்குமார்

இலக்கிய சாதனைக்கான சிறப்பு விருது பெறும் பி.ஜெ.திலிப்குமார், கனடாவில் 15 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கும் பலம் வாய்ந்ததும் புகழ் பெற்றதுமான “தாய் வீடு” மாத இதழின் முதன்மை ஆசிரியர். இவர் பல அரங்கங்களில் தன் நடிப்பாற்றலால் பெரிதும் மதிக்கப்பட்ட நடிகராகப் பெயர் பெற்றவர். உலக இதழ்களின் தரத்துக்கு நிகராக தாய்வீடு இதழை வடிவ நேர்த்தியிலும், உள்ளடக்கத்திலும் சிறப்பாக அமைத்து வெற்றிகரமாக நடத்தி வருபவர். இதழியலோடு மட்டும் நின்றுவிடாமல் கடந்த காலங்களில் ஆண்டுதோறும் இவர் நடத்திய அரங்கியல் விழாக்களும் பிரபலமானவை. கருத்தரங்குகள், சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலமும் தமிழ் வளர்ச்சிக்காக இவர் பாடுபட்டு வருகிறார்.

### பிறமொழி இலக்கிய விருது: லோகதாசன் தர்மதுரை

பிறமொழி இலக்கிய விருது பெறும் லோகதாசன் (தாஸ்) தர்மதுரை கணினி தகவல் அமைப்புத் துறையில் கனடாவில் பணிபுரிந்து வருபவர். இவர் அடையாளம் மிக்கதோர் எழுத்தாளர். போர்ச்சூழல் காரணமாக இலங்கையை விட்டு வெளியேறி பல ஆண்டு கள் அலைந்து கனடாவுக்குப் புலம்பெயர்ந்த வர். முப்பத்திரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு தன் அனுபவங்களை 'The Sadness of Geography ' என்ற தலைப்பில் சுயசரிதையாக எழுதினார். இவருடைய “நிலவியலின் துயரம்” என்ற அந்த நூலுக்கு உலகம் முழுவதும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நல்ல வரவேற்பு கிடைத்திருக்கிறது. இவ்வகையில் பிறமொழி இலக்கியம் சார்ந்த பிரிவில் இவர் விருது பெறுகிறார்.

### தமிழ்த் தொண்டு விருது: வீரகத்தி சுதர்ஷன்

தமிழ்த் தொண்டு விருது பெறும் வீரகத்தி சுதர்ஷன் இலங்கையைச் சேர்ந்தவர். இவர் இலங்கையில் நெல்லியடி, கரவெட்டியில் பிறந்தார். கல்வி மாணி, கல்வி முதுமாணி பட்டங்களைப் பெற்று ஆசிரியப் பணியாற்றி தற்போது ஹாட்லி கல்லூரி துணை அதிபராகப் பணி யாற்றுகிறார். ஆரம்பத்திலிருந்தே இவர் தமிழ் மீதும் தமிழ்க் கல்வி மீதும் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றினார். மாணவர்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் அவர்கள் முன்னேற்றத்திலும் மிகுந்த அக்கறை கொண்டு உள்ளார்ந்த கடமையுணர்வுடன் இவர் சேவை புரிந்தவர். அடையாளம் வெளியே தெரியாத கல்விச் சேவைக்காக அவருக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

“கனடா இலக்கியத் தோட்டம் வழங்கும் விருது“ விழா வழக்கமாக நேரடியாக விருந்தினர்களை அழைத்து கனடாவில் டொரண்டோ நகரில் நடைபெறும். சமீபகால நோய்த்தொற்று தாக்கத்தால் இவ்வாண்டு இணைய வழியில் நடைபெறுகிறது.

வருகிற டிசெம்பர் 4ஆம் திகதியன்று இந்தியா- இலங்கை நேரத்தின்படி இரவு 8.30 மணிக்கு (கனடா-அமெரிக்க நேரத்தின் படி காலை 10 மணிக்கு) இணையம் மூலம் மெய்நிகர் விழாவாக நடைபெறுகிறது.


விழாவில் இணைய: **ID 811 4968 3360**
**Password 078782**

ஈழநாடு



# கிறுக்குப் பிடித்தாலும் ஆம்பிளைதானே...

**என். எஸ். நடேசன்**



பாடசாலை முடிந்து தனியாக வீடுநோக்கி வந்து கொண்டிருந்தேன்.

நாலாம் வகுப்பில் நான் மொனிட்டராக இருந்த தால் வருட இறுதி நாளில் என்னிடம் இருந்த சாவிகளை வகுப்பு ஆசிரியரிடம் கொடுத்து விட்டு வருவதற்கு சிறிது நேரம் பிந்திவிட்டது. "மொனிட்டராக வந்தபின்பு பொறுப்பு வந்திருக்கு" என அம்மா பலமுறை கூறுவதுண்டு.

மாலை சூரியன் முற்றாக மறையவில்லை. ஆனாலும், பாதை ஓரத்தில் இருந்த பாரிய மரங்கள் பாதையை இருட்டாக்கின. தோளில் புத்தகங்கள் கனத்தன. இந்த பாடப்புத்தகங்களை இனித் தூக்க வேண்டியதில்லை என்ற சிறு சந்தோசம் மனத்தில் மலர்ந்தது. ஐந்தாம் வகுப்புக்கு எப்படியும் புத்தகப் பை ஒன்று வாங்கித் தருவதாக அம்மா சத்தியம் செய்திருக்கிறாள். பையுடன் கழுத்தில் தொங்கும் தண்ணீர் போத்தலுடன் பாடசாலை செல்லும் என் தோற்றம் கனவுகளில் எட்டிப் பார்த்தது.

ஐந்தாம் வகுப்பை நினைத்து கற்பனை செய்யும் போது இடுப்பில் இருந்த கால்சட்டை நழுவப் பார்த்தது! சிறிது நேரம் நின்று கால்சட்டையை சரி செய்ய முயன்றபோது பாதை ஓரத்து பாரிய அரச மரம் மனத்தை கலக்கியது. பாதையில் இருந்து சிறிது விலகி இருந்தாலும் பாரிய குடைபோல் கிளை விரிந்து இருந்தது. மரத்தின் அடிப் பகுதியை மூன்றுபேர் கைகோர்த்து நின்றால் மட்டும் பிடிக்க முடியும். மரத்தின் கீழ் வயிரவர் சூலம் உள்ளது. அரசடி வயிரவரைப் பற்றிய பல கதைகள் ஊரில் உலவின. பொய், களவு போன்ற குற்றம் செய்தவர்களை இங்குதான் வந்து சத்தியம் செய்யச் சொல்வது ஊர் வழக்கம். திருடியவர்கள் மீண்டும் அப்பொருளை வயிரவரிடம் கொடுத்துவிட்டுப் போவார்கள் என என்னுடன் படிக்கும் கண்ணன் பொழிப்புக் கூறினான்.

'சமீபத்தில் ஏதாவது பொய் சொன்னேனோ' என யோசித்துக்கொண்டு வேகமாக நடந்தேன். 'எதற்கும் ஒரு தேவாரம் பாடினால் பயம் போய் விடும்" என, "தோடு உடைய செவியன்" என கூவியபடி நடந்தேன்.

"நாயினாரா? ஏன் இவ்வளவு நேரம்?" என கேட்டபடி ஆலமரத்துக்கு பின்னாலிருந்து நாகமணி திடீரென்று தோன்றினான்.

இந்த நேரத்தில் இவன் எங்கே வந்தான்?' என நினைத்தபடி தேவாரத்தை நிறுத்திவிட்டு வேகமாக நடந்தேன்.

நாகமணி அதே மண்ணிற அரைமுழ வேட்டியை நிலத்தைக் கூட்டும்படி அணிந்திருந்தான்.. சட்டை போட்டதை நான் என்றுமே கண்டதில்லை. தலையில் உச்சி மொட்டையை மூன்று பக்கம் அணைகட்டியபடி நரை கலந்த தலைமயிர் உள்ளது. அடிக்கடி ஊதிய பலூனைப் போன்ற முகம். பலகாலம் சவரம் செய்யப்படவில்லை. அடிக்கடி தலையைத் தடவியதால்தான் இவனுக்கு மொட்டை விழுந்ததோ என நான் பலதடவை நினைத்தது உண்டு. நெஞ்சில் கத்தையாக மயிர் இருந்தது. முதுகில் பாரிய தளும்புகள் தெரியும்: அவை துலாக்காவடி எடுத்ததால் ஏற்பட்டவை என கேள்விப்பட்டேன். சேற்றுக் கடலில் தெரியும் மட்டியின் சிறுகண்கள் போன்ற கண்கள் நாகமணிக்கு. ஆனாலும், அலைந்து கொண்டிருக்கும் பார்வை.

நாகமணிக்கும் தனக்கும் ஒரே வயது என அம்மா கூறியதை வைத்துப் பார்த்தால், அவனுக்கு முப்பத்தைந்து வயதாவது இருக்க வேண்டும். நாகமணியின் பூர்வீகம் ஊரே அறிந்தது. அவனுடைய தாய் தந்தையர் மிகவும் வசதியாக சிங்கப்பூரில் வாழ்ந்தார்கள். இவன் சிறுவனாக இருக்கும் போது ஜப்பானியர்களின் குண்டு தாக்கி இருவரும் இறந்துவிட்டார்கள். உறவினர் உதவியுடன் கப்பலேறி இங்கு வந்து தூரத்து உறவுக்காரப் பாட்டியுடன் வாழ்ந்து வந்தான். பாட்டிக் கிழவி இறந்ததும் நாகமணி அனாதையானான்.

அம்மாவிடமிருந்து பெற்ற விசேட தகவல்களின்படி- சிறுவயதில் நாகமணி பாடசாலைக்கு வந்தாலும், படிக்கமாட்டான். மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடமாட்டான். இடையிடையே குழப்பம் விளைவிப்பான். சாப்பிடும் போது எச்சில் ஒழுகச் சாப்பிடுவதால் மற்றய பிள்ளைகளிடம் இருந்து விலக்கப்பட்டான். சத்தம் போட்டு அழுவதோ, சிரிப்பதோ அரிது. வாலிப வயதிலும் வேலைகள் செய்வதில்லை. கோவிலில் சாப்பாடு கிடைக்காத நாட்களில் ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று சாப்பிடுவான். தங்குவதற்கு மட்டும் தனது கொட்டிலுக்குச் சென்றுவிடுவான்.

இவனது கொட்டில் தடிகளால் கட்டப்பட்டு, கிடுகுகளால் வேயப்பட்டு, சுற்றிவர அடைத்து இருக்கும். வாசல்கதவு இல்லாமல் கிடுகுத் தட்டியால் மறைக்கப்பட்டிருக்கும். இவனது கொட்டிலுக்கு பக்கத்தில் காவல் கோபுரம் எப்பவும் இருக்கும். இவனது கொட்டிலும் கோபுரமும் மாதம் ஒருமுறை இடம் மாறும்.

தாத்தா நடுஇரவு நேரத்தில் மீன் பிடிப்பதற்காக பட்டரி லைட்டுடன் கடல்கரைக்குச் சென்றபோது கரையில், அலைந்து கொண்டிருந்த நாகமணியிடம்,

"ஏன் படுக்கவில்லை" எனக் கேட்டார்.

'காலடித் தடயங்களைத் தேடுகிறேன்" என்றான் நாகமணி.

"உனக்கு வேலை இல்லையா?"

"எதிரிகள் இந்த ஊருக்குப் படையெடுப்பதற்கு முன்பாக உளவு பார்க்க வந்திருக்கிறார்கள் என எனக்குத் தகவல் வந்துள்ளது" எனக் கூறிவிட்டு காலடி தடயங்களை மீண்டும் தேடினான்.

"போய் படுத்துத் தூங்கு" என தாத்தா துரத்தினார். தாத்தா பாட்டியிடம் ஒருமுறை கூறியதிலிருந்து இந்த வரலாற்றை அறிந்து கொண்டேன்.

இளம் பெண்கள் நாகமணியைக் கண்டாலே வெறுப்புடன் காறி உமிழ்வார்கள். "கரப்பான் பூச்சியைப் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது" என பக்கத்து வீட்டுத் தேவி என்னிடம் கூறினாள்.

இந்த வெறுப்புக்கு அழுக்கான நாலுமுழவேட்டி. மொட்டையான தலை, வாத்துப் போன்ற நடை மட்டும் காரணம் என கூறமுடியாது. கயிற்றுக் கொடிகளில் உலரப் போடும் பெண்களின் உள்ளாடைகள் காணாமற் போவதற்கு நாகமணிமேல் சந்தேகம் பெண்கள் வட்டாரத்திலே நிலவி வருகின்றது.

எதிர்வீட்டு சந்திரா பட்டணத்தில் படிப்பவள். விடுமுறைக்காக வீடுவந்து நின்றபோது தனது உள்ளாடையைக் காணவில்லை எனக் கூறியபடி தடி எடுத்துக் கொண்டு நாகமணியை அடிப்பதற்குச் சென்றாள்.

தாத்தா இடைமறித்து, 'அவன்தான் எடுத்தான் என்பதற்கு என்ன ஆதாரம்?' எனக் கேட்டுச் சந்திராவைத் தடுத்து நிறுத்தினார்.

இரவு முழுவதும் ஊரைச் சுற்றித் திரியும் நாகமணிக்கு புத்திசுவாதீனம் அற்றவன் என சிலரின் அனுதாபம் கிடைத்தாலும், பெரும்பாலானவர்கள் அசிங்கமான விலங்கையோ அல்லது குஷ்டரோகியையோ பார்ப்பது போன்றே பார்த்தார்கள். இளம் பெண்கள் நாகமணியை வெறுப்பதிலும், சிறுவர்கள் துன்புறுத்துவதிலும் முன்னின்றார்கள். நாகமணி சாப்பிட்டுவிட்டு அதே இடத்தில் பகல்நேரத்தில் கண்ணயர்வது உண்டு. என்னோடு ஒத்த சிறுவர்கள் நாகமணிமேல் வண்டைப் பிடித்து விடுவதும், காதுக்குள் ஈர்க்கிலால் நுழைப்பதும், பேப்பரைச் சிகரட்டாகச் சுருட்டி அவன் வாயில் திணிப்பதிலும் இன்புறுவார்கள்.

நான் ஒருமுறை சிவப்பு நிற கம்பளிப்பூச்சியை நாகமணிமேல் விட்டபோது பிடிபட்டேன். நாகமணி உலுப்பிய உலுப்பில் பயந்துவிட்டேன். இந்த சம்பவத்தின் பின் மரியாதை கலந்த பயம் நாகமணிமேல் உருவாகியது. கோயில் திருவிழா தொடங்கினால் ஊருக்கு மட்டுமல்ல நாகமணிக்கும் கொண்டாட்டம். கோயில் வாசலில் உள்ள வாழைமரத்தின் கீழ் இருந்து தேவாரம் தப்பும் தவறுமாகப் பாடுவதும், அங்கு கிடைக்கும் பிரசாதங்களை உண்பதுமாக நேரத்தைச் செலவிடுவான். கோயிலுக்கு வரும் பெண்களைப் பார்க்க, நாண்டு கிடக்கிறான்' என்பது பெண்கள் வட்டாரத்தில் நிலவிய அபிப்பிராயம்.

சிறுவர்கள் நாகமணிமேல் கல்லெறிந்து குறும்பு செய்தாலும், பெரியவர்களுக்கு பயந்து தங்கள் குறும்புகளைக் குறைத்துக் கொள்வார்கள். திருவிழா காலம் நாகமணிக்கு விடுமுறைக் காலம் போன்றது.

அந்தவருடம் எங்கள் ஊரில் மழை பெய்யவில்லை. கிணறுகள் வற்றிவிட்டன. எங்கள் வீட்டுக் கிணற்றில் ஒரு வாளி தண்ணீர்கூடக் கிடைக்காது. குடிப்பதற்கு கடற்கரையில் மணற்பகுதியில் சிறிய குழி தோண்டி அதில் இருந்து பொசியும் நீரைத் தென்னஞ் சிரட்டையால் அள்ளி எடுத்துக் குடத்து வாயிலில் துணிகட்டி வடித்தெடுப்போம். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு குழி சொந்தமாக இருக்கும். குளிப்பதற்கு கோயிலுக்குப் பக்கமான பெரிய கிணற்று நீரில் ஆண்கள் பகலில் குளிப்பதும், மாலைப் பொழுதில் பெண்கள் குளிப்பதும் ஊர் வழக்கம்.

அன்று ஒருநாள் அம்மா, தேவி, சந்திரா ஆகியோருடன் கோயில் கிணற்றுக்குச் சென்றேன். அம்மா துணி துவைக்கும்போது சந்திரா எனக்கு முன்பு தண்ணீர் அள்ளிக் குளித்தாள். ஒன்பது வயதான என்னை ஓர் ஆணாகவே நினைக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் சுற்றி இருந்த பனந்தோப்புக்குள் பந்தை எறிந்து விட்டுத் தேடிக்கொண்டு சென்றேன். இரண்டு கட்டைப்பனை மரங்களுக்கு இடையே நாகமணியைக் கண்டேன்.

"அம்மா நாகமணி ஒளிந்திருக்கிறான்" என கூவினேன்.

"அட நாயே பெண்கள் குளிக்கும் இடத்தில் உனக்கு என்ன வேலை" என அம்மா அவனை விரட்டினாள்.

"சந்திரா பாரிய கல்லைத் தூக்கியபடி நாகமணியை நோக்கி ஓடினாள். வாத்துப் போல் நடக்கும் நாகமணி முயலைப் போல், பாய்ந்து, பாய்ந்து ஓடினான்.

அடுத்தநாள் நாகமணி வீட்டுக்குச் சாப்பிட வந்தான். "இனிமேல் இந்த வீட்டுக்கு சாப்பிட வராதே" என கூறி அம்மா படலையைப் பூட்டினாள்.

"நாச்சியார் அப்படிச் சொல்லாதே, பசிக்குது"

"பொம்பிளை குளிக்கிறதைப் பார்க்கிற உனக்கு என்ன சாப்பாடு" என ஆத்திரமாக அம்மா கத்தினாள்.

நாகமணியின் கண்களில் கண்ணீர் வந்தது.

"அவனை ஏன் துரத்துகிறாய்?" என்றபடி சமையல்கட்டிலிருந்து பாட்டி வந்தாள்.

"இவன்ர குணத்துக்கு வீட்டில் அடுக்கக் கூடாது." இது அம்மாவின் கொள்கைப் பிரகடனம்.


"சும்மா உள்ளே போ, நான் சாப்பாடு போடுகிறேன்" "தலையில் கிறுக்குப் பிடித்தாலும் அவன் ஆம்பிளைதானே" என்றாள் பாட்டி.

"தலையில் கிறுக்குப் பிடித்தாலும் ஆம்பிளைதானே..' என்று பாட்டி முணுமுணுத்தது அம்மா செவிகளிலே விழுந்திருக்குமா? ■



# தலைநகரில் ‘வழித்தடம்’ அறிமுகம்





இலங்கையில் புதிதிதாக வெளிவந்திருக்கும் “வழித்தடம்” சமூக, அரசியல், பண்பாட்டு, கலை, இலக்கிய காலாண்டிதழ் வெளியீட்டு விழாகடந்த வியாழன் பௌர்ணமி தினத் தன்று தலைநகரில் இடம்பெற்றது. கூடவே “தெளிவத்தையின் இரு கதைகள்” பிரசுரமும் எம். வாமதேவ னின் “நீங்காத நினைவுகளில்...” அறிமுகமும் இடம்பெற்றன.

கொரோனா நெருக்கடியால் நேரில் ஒன்றுகூடுவதிலுள்ள சிரமங்களுக்கு மத்தியிலும், இந்த மூன்று நூல்களை செய்யும் நிகழ்வு கொழும்பில் எளிமையாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது. கவிஞரும் கொழும்பு 12 - வாழைத்தோட்டம் அல் ஹிக்மா பாடசாலை அதிபருமான முல்லை முஸ்ரிபா வழித்தடம் சஞ்சிகையை அறிமுகஞ் செய்து நிகழ்வைத் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்விற்கு மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப், நூலாசிரியரும் முன்னாள் அமைச்சுச் செயலாளருமான எம்.வாமதேவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். “நீங்காத நினைவுகளில்...” நூலை நூலாசிரியரான எம். வாமதேவன் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு சிறப்புப் பிரதியாக வழங்கி வைத்தார். அறிமுக உரையை அதன் வெளியீட்டாளரான மல்லியப்புசந்தி திலகர் நிகழ்த்தினார்.

“தெளிவத்தையின் இரு சிறுகதைகள்” நூலை கவிஞரும் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் ஆசிரியருமான யாழ் அஸீம் நூலாசிரியரிடம் கையளித்தார். அதன் வெளியீட்டாளரான சிராஜ் மஷ்ஹூர் அறிமுக உரையை நிகழ்த்தினார். பங்குபற்றுனர்கள் சார்பில் எழுத்தாளர் தாஹிர் நூருள் இஸ்ரா சிறப்பானதொரு கருத்துப் பகிர்வை முன்வைத்தார்.

சிறப்பு நிகழ்வாக இரு வாரங்களுக்கு முன் கலாபூஷண விருது பெற்ற கவி ஞர் மேமன்கவி பொன பொன்னாடை, புத்தக பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார். தெளிவத்தை ஜோசப் , எம். வாமதேவன் ஆகிய இருவரும் தமது நூல்கள், எழுத்து, நட்புறவு, மலையக வாழ்வியல் தொடர்பில் அருமையான கருத்துக்களை தமதுரையில் பகிர்ந்து கொண்டனர்.

இந்நிகழ்வை பாக்யா பதிப்பகமும் பேஜஸ் புத்தக இல்லமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தனர்.





# புத்தாக்க அரங்க இயக்கத்திற்கு விருது

அமரர் சிவஜோதி அவர்களின் பொன்விழா நினைவாக தேசியரீதியில் தமிழ் நாடக நிறுவனங்களுக்கிடையில் சிறந்த நாடக அரங்கவியல் செயற்பாட்டுகளை மேற்கொள்கின்ற தமிழ் நாடக அமைப்புக்கான விருது புத்தாக்க அரங்க இயக்கத்திற்கு வழங்கப்பட்டது.

கிளிநொச்சி திருநகர் கனகராசா வீதியில் அமைந்துள்ள லிற்றில் எயிட் நிறுவனத்தில் நடைபெற்ற அமரர் சிவஜோதி அவர்களின் பொன்விழா நினைவு விருது வழங்கல் நிகழ்வில் புத்தாக்க அரங்கஇயக்கத்தின் ஸ்தாபகர்களான எஸ்.ரி.குமரன் எஸ்.ரி.அருள்குமரன் இருவரும் இவ்விருதினை பெற்றுக்கொண்டனர்.

# மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை நினைவு தினம்






தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரும் மக்கள் கவிமணி என்று போற்றப்படுகின்ற இலக்கியவாதியுமான சி.வி. வேலுப்பிள்ளையின் 37ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரத்தின் ஆலோசனைக்கேற்ப ஒவ்வொரு வருடமும் மக்கள் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை நினைவு தினம் தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஏற்பாட்டில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அதற்கேற்ப மடக்கும்புர தோட்டத்திலுள்ள சி.வி வேலுப்பிள்ளையின் சமாதியில் அன்னாருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதோடு மடக்கும்புரை தோட்ட ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றன.



மக்கள் கவிமணி சி .வி வேலுப்பிள்ளையின் நினைவு தின உரைகள் மடக்கும்புர தோட்டத்தில் உள்ள அன்னாரின் சமாதி வளாகத்தில் இடம் பெற்றன. இந்த நிகழ்வில் தொழிலாளர் தேசிய சங்கம் பொதுச்செயலாளர் எஸ்.பிலிப், பிரதி நிதிச் செயலாளர் சோ. ஸ்ரீதரன் பிரதிப் பொதுச் செயலாளர் பி. கல்யாணகுமார், தேசிய அமைப்பாளர் நகுலேஸ்வரன், உபதலைவர் சிவானந்தன், கொட்டகலை பிரதேச சபை உறுப்பினர் ரவிச்சந்திரன் , பிரதேச அமைப்பாளர்களான பாலுவண்ணன், கார்த்திக் மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் மற்றும் முன்னணி என்பனவற்றை முக்கியஸ்தர்களும் மக்கள் பிரதிநிதிகளும் அமைப்பாளர்களும் இணைப்பாளர்களும் தொழிற்சங்க இயக்குனர்களும் தோட்டத் தலைவர்களும் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள் - II
நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்

கல்வி tv CHANNEL

06) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

(i) குயில் கூவும் என்பது போல் குரங்கு ……………………………………………
(அலப்பும் / கத்தும்)

(ii) முந்திரி – குலை போல சோளம் ……………………………ஆகும்.
(பொத்தி / கதிர்)

07) மயிலின் பெண் மரப் பெயரை எழுதுக.

……………………………………………………………………………

08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) ஒரு நூலை வெளியிடுவோர் அந்நூலைப் பற்றிக் கூறும் உரை
(அணிந்துரை / பதிப்புரை)

(ii) எழுபத்தைந்தாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா.
(பவளவிழா / பொன் விழா)

09) (i) தேநீர் என்பதைப் பிரித்தெழுதுக. ……………………………………………

(ii) நெல் + வயல் என்பதைச் சேர்த்தெழுதுக. ……………………………………


10) பின்வரும் இணைமொழியைப் பூர்த்தி செய்க.

நீட்டி ……………………………………


11) தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய **தமிழ்ச் சொற்களை** எழுதுக.

(i) Owl ………………………… (ii) Comb ……………………………………

**12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்குப் பொருத்தமான ஆங்கிலச்சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i) 

……………………………

(ii) 

……………………………

13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

(i) have / one / I / brother :……………………………………………………

(ii) likes / Cat / milk / My : ……………………………………………………

14) “அரின்ன” என்ற சிங்களச் சொல்லுக்குரிய **தமிழ்ச் சொல்லை** எழுதுக.

……………………………………………………………………………

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை **தமிழ் எழுத்துக்களில்** எழுதுக.

தாத்தாமார் இருக்கிறார்கள் : ……………………………………………………

16)

| | | |
|---|---|---|
| | 6 | |
| 8 | 0 | 3 |
| | 5 | |

(i) வட்டத்தில் உள்ள எல்லா இலக்கங்களையும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.


……………………………………………………………………………

(ii) உருவாக்கிய எண்ணிலே இலக்கம் 3 குறிக்கும் பெறுமானம் யாது?

……………………………………………………………………………

17) வியாபாரி ஒருவர் தன்னிடமிருந்த பென்சில்களில் $\frac{3}{4}$ ஐ விற்றார். விற்றபின் அவரிடம் 16 பென்சில்கள் எஞ்சியிருந்தன. அவரிடம் ஆரம்பத்தில் இருந்த பென்சில்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……………………………………………………………………………

18)  இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உண்டு?

……………………………………………………………………………

19) வருண் 375 மாம்பழங்களையும் ஜனா 450 மாம்பழங்களையும் மாலா 580 மாம்பழங்களையும் வாங்கினார்கள். வருணும் ஜனாவும் வாங்கிய மாம்பழங்களின் மொத்த எண்ணிக்கைக்குச் சமனாவதற்கு மாலா மேலும் எத்தனை மாம்பழங்களை வாங்க வேண்டும்?

……………………………………………………………………………

20) துளசி ஒரு புத்தகத்தை வாசிப்பதற்கு 2 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் எடுத்தாள். அவள் அப்புத்தகத்தை பி.ப 2.30 இற்கு வாசித்து முடித்தாள்.

(i) துளசி புத்தகத்தை வாசிக்கத் தொடங்கிய நேரம் யாது? ……………………………

(ii) அவள் புத்தகத்தை வாசித்து முடித்த நேரத்தினை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக.

……………………………………………………………………………

21) 13 என்னும் எண்ணுக்குப் பிந்திய எண்ணை உரோம எண்குறியில் எழுதுக

……………………………………………………………………………

அருந்ததியின்

# வரன் தேடுவோம் வாருங்கள்

## திருமண தேடலை இலகுவாக்கும் ஒரு முயற்சி

ஆயிரக்ககணக்கான உள்நாட்டு, வெளிநாட்டு அரச தனியார் தொழில்புரியும் மணமக்க-ளிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்.இந்நிகழ்விற்கு எமது ஜோதிடர் வரவுள்ளதால் உங்களுக்கு பொருத்தமான சாதகங்களை பெற்று உடன-டியாகவே பொ ருத்தம் பார்த்துக்கொள்ள முடியும்.

**வெள்ளவத்தை**

**21/11/2021**

**9.00 a.m -12.00 a.m**

**Green Palace**

**No 30 W.A. Silva Mawatha,**

**Colombo 06**

**யாழ்ப்பாணம்**

**28/11/2021**

**9.00 a.m -12.00 a.m**

**Thivya Mahal**

**1001, K.K.S Road,**

**Vannarpannai, Jaffna**

## இந்நிகழ்வில் சிறப்பு பட்டிமன்றமும் நடைபெறவுள்ளது

600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 25 னை
இந்நிகழ்வில் பெற்றுக்கொள்ளலாம்



**அருந்ததி பிரைவட் லிமிடட்**

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

**www.arunthathee.com | +94 777 164 524**

## எம்மைவிட்டு...

இன்று ஆரம்பமாகும் மாவீரர் தின நினைவு வாரத்தையொட்டி மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு நீதிமன்றங்கள் ஊடாக தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இந்த விடயம் தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை அரசு இறந்தவர்கள் ஆத்மாக்களை நினைவு கூருவதைத் தடைசெய்வது போர்க்களத்தைவிட, தமிழ்பேசும் மக்கள் நெஞ்சில் ரணகளத்தை எரிய விடுவதாகவே இருக்கின்றது. மனித குலத்தின் பாரம்பரிய மாண்புகளையும் அரசு அழித்தொழிக்கின்றது.

இலங்கையில் கடந்த 70 ஆண்டுகளுக்கு மேலான வரலாற்றுக் காலத்தில் மக்களும் தமிழ் நிலமும் இனக்கலவரங்களாலும், இனவிடுதலைக்கான போர்க்களத்திலும் இலட்சக்கணக்கான உயிர்களை பலிகொடுத்து ஆறாத ரணகளத்தில் மூழ்கிக்கிடக்கும் மனிதகுல வரலாற்றில் கறைபடிந்து கிடக்கும் நிலைமையை அனுபவித்து வருகின்றோம்.

இறந்தவர்கள் ஆத்ம சாந்திக்காக அந்த ஆத்மாக்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும், கண்ணீர்விட்டு கலந்து ஆறுதலடையும் நாட்களில் தெரிந்து அஞ்சலிப்பதும் உலக மனிதகுல நாகரிகம். இதனால் அந்த ஆத்மாக்களின் உறவுகளும், மனித நேயம் கொண்டவர்களும் நினைவு கூருவதனால் ஆறுதல் பெறுகின்றோம். இதனை நாகரிக உலகம் ஏற்றுக்கொண்டு கடைப்பிடிக்கின்றது. அரசுகள் அங்கீகாரம் வழங்கி வருகின்றன.

தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள், மதங்கள் குறிப்பாக இந்து மக்கள் ஆத்ம ஈடேற்றத்துக்காக வீடுகளில், நீர் நிலைகளில், புண்ணிய தீர்த்தங்களில், கோவில்களில் நினைவுகூர்ந்து ஆத்மசாந்திப் பிராத்தனைகளில் ஈடுபடுகின்ற மனித உரிமையை போற்றி வருகின்றார்கள். இலங்கையில் சென்ற காலத்தில் அந்த நாகரிகம் பேணப்பட்டது.

இப்போது அந்தநிலைமை மாற்றப்படுகின்றது. அரச ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக ஆயுதப் புரட்சியில் ஈடுபட்டவர்கள் ஜே.வி.பியினர். அவர்கள் இறந்தவர்களை நினைவு கூருகின்றார்கள்.

அரசு இறந்த இராணுவத்தினருக்கு மரியாதை செய்கின்றது. பாராளுமன்ற வளாகத்தில் இந்த நினைவு மண்டபம் உண்டு. ஒரு நாளைப் பிரகடனம் செய்து ஒன்று கூடி அணிவகுத்துப் போற்றுகின்றது.

ஆனால், இலங்கையில் தமிழ் மக்களுக்கு, தமிழ்பேசும் மக்களுக்கு இறந்தவர்களை நினைவுகூர்ந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனை செய்வதற்கு மனித உரிமை மறுக்கப்படுவது நாகரிகமற்ற, ஜனநாயகமற்ற மனித குல விரோத செயலாகவே மக்கள் மனங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றது.

பொலிஸார் வலிந்து நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொடுத்து ஆத்மசாந்தி பிரார்த்தனைக்காக நினைவு கூருவதற்காகத் தடைகளை விதிக்க முயற்சிக்கின்றனர். நீதிமன்றங்கள் மக்கள் தங்கள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, நினைவுகூருதல் கடமைகளை, ஈமக்கடனை நிறைவேற்ற அனுமதி வழங்கி வருகின்றன. சில இடங்களில் நீதிமன்றங்கள் அனுமதி மறுத்துள்ளன.

கடந்த காலங்களில் நீதிமன்ற வழக்குகளில் வழக்கறிஞர்கள் வாதாடி கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை பெற்றுள்ளனர். நினைவுகூர, ஆத்மசாந்தி, ஈமக்கடன் நிகழ்த்த அனுமதித்து நீதி வழங்கியுள்ளன.

ஆனால், தமிழ் மக்களின் கார்த்திகைத் தினங்களில் தீபமேற்றி விழா எடுக்கும் நிகழ்ச்சிகளைக்கூட அரசும், பொலிஸாரும் தடை செய்கின்றனர். ஆனபடியால் அரசினதும் பொலிஸாரினதும் இத்தகைய மனிதகுலத்துக்கு எதிரான இறந்தவர்களின் ஆத்மாக்களை நினைவு கூர்ந்து ஈமக்கடன் செய்வதைக் கூட மறுக்கின்ற அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் மக்களாகிய நாம் ஜனநாயக வழியில் எதிர்த்து நிற்கவேண்டும்.

கொரொனாத் தொற்று நோயைப் பரவவிடாமல் செயற்படவேண்டிய பொறுப்பையும் நாம் சுமந்து நிக்கின்றோம் என்பதை மனதில் நிறுத்தவேண்டியுள்ளோம்.

எவ்வாறெனினும், இறந்த எம்மைவிட்டுப் பிரிந்த ஆத்மாக்களுக்காக பிரார்த்திக்கும்-நினைவுகூரும் முகமாக ஆத்மகடனை அமைதியாக எம் வாழுமிடங்களில், நம் இதயங்களில் நினைவுகூர்ந்து விளக்கேற்றி நிறைவேற்றுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். இது மக்களின் அடிப்படை உரிமை. அதனை நிலைநாட்டுவோம்.

அத்துடன், தமிழ்த் தேசிய இனங்களுக்கிடையே உள்ள மதங்களுக்கிடையில் முரண்பாடு ஏற்படாமல் நல்லிணக்கத்துடன் இந்த நினைவேந்தல் நிகழ்ச்சியை முன்னெடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## கிளாலியில்...

ஒன்று உட்புகுந்து வீட்டின் ஜன்னல்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு அவற்றின் கண்ணாடிகளை உடைத்தனர்.

பின்னர் வீட்டின் பிரதான கதவினை கோடாரியால் கொத்தினர். அதன்போது உசார் அடைந்த குடும்ப தலைவர் தனது மனைவி, பிள்ளைகளை அறைக்குள் வைத்து பூட்டி விட்டு, தனியாளாகத் தாக்குதலாளிகளை எதிர்கொள்ளத் துணிந்து சமையலறையில் இருந்த கத்தி மற்றும் மிளகாய் தூள் என்பவற்றால் தாக்குதலாளிகள் மீது தாக்குதலை மேற்கொண்டார்.

எதிர்பாராத தாக்குதலால் நிலைகுலைந்த தாக்குதலாளிகள் அங்கிருந்து தப்பியோடியுள்ளனர்.

அதேவேளை, அவரது மனைவி பளை பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக தகவல் வழங்கியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தாக்குதலாளிகளைத் தமக்குத் தெரியும் என அவர்களின் வீடுகளை தாக்குதலுக்குள்ளான குடும்பம் இனங்காட்டியுள்ளது.

அதனடிப்படையில் அங்கு பொலிஸார் சென்றபோது சந்தேகநபர்கள் வீடுகளில் தங்கியிருக்கவில்லை. இந்நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழில் அஜித்...

கடன் திட்டத்தின் கீழ் பயனடைந்த அச்சுவேலி கைத்தொழில் பேட்டை, வசாவிளான் இயற்கை உர தோட்டம் உள்ளிட்ட சிலவற்றைப் பார்வையிட்டதுடன் பயனாளிகளுடனும் கலந்துரையாடினார்.

இன்று காலை 8 மணிக்கு தனியார் விடுதி ஒன்றில் நடைபெறவுள்ள இலங்கை மத்திய வங்கியின் விசேட கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக யாழ்ப்பாணம் வருகை தந்த மத்திய வங்கி ஆளுநரது விஜயம் முக்கியத்துவமானதாகப் பார்க்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் பொறுப்பேற்ற பின்னர் யாழ்ப்பாணத்துக்கான அவரது முதலாவது விஜயம் இதுவாகும். (இ)

## ஞானசார தேரரின்...

வடக்கு மாகாணத்தில் முதலாவது கூட்டம் வவுனியா மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று பிற்பகல் தொடக்கம் மாலை வரை நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணியின் சட்டம் தொடர்பான கருத்தறியும் கூட்டம் ஞானசார தேரர் தலைமையிலான செயலணியின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது.

இதன்போது அழைப்பு விடுக்கப்பட்ட சமூக மட்ட உறுப்பினர்களிடம் மட்டும் ஒரே நாடு, ஒரே சட்டம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கேட்டறியப்பட்டன.

குறித்த கலந்துரையாடலில் செய்தி சேகரிப்பதற்குச் சென்ற வவுனியா ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# அடுத்த ஆண்டு அரசியல் மாற்றம் பொது எதிரணி கூட்டு உருவாகும்!

### ஐ.தே.க பிரதித் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 21

அடுத்த ஆண்டு பெரிய அரசியல் திருப்பம் ஏற்படும்.அப்போது, பொது எதிர்க்கட்சி கூட்டணி அமைக்கப்படும். இந்த மாற்றத்துக்காக எம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு தயாராகவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

மொனராகலை மாவட்ட கட்சி செயற்பாட்டாளர்களிடம் பேசிய அவர், ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளை உள்ளடக்கிய மாபெரும் எதிர்கட்சி கூட்டணி அடுத்த ஆண்டு உருவாகும்-என்றார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உள்முரண்பாடுகள் காரணமாக தற்போதைய அரசாங்கம் நீண்டகாலம் ஆட்சியில் இருக்காது என்பதால் அடுத்த ஆண்டு ஒரு அரசியல் திருப்பம் ஏற்படும். இந்த மாற்றத்திற்கு நாம் தயாராக இருக்க வேண்டும். பொதுவான எதிர்க்கட்சி கூட்டணி காலத்தின் தேவை. அடுத்த வருடம் இந்த கூட்டணி வடிவம் பெறும்.

அரசாங்கத்தில் உள்ள சில அமைச்சர்கள் தற்போது எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசி வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்க தேசத்தை கட்டியெழுப்பக்கூடிய திறமையான தலைவர்.

மேலும், ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் எங்களுக்கு எதிரிகள் அல்லர்.

எங்கள் அனைவரதும் பொது எதிரி அரசு. அடுத்த ஆண்டு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் பிறர் ஒன்றிணைந்து ஒரு பொதுவான கூட்டணியை உருவாக்குவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள நாம் எம்மை ஒழுங்கமைத்துக் கொண்டு இந்த திருப்பத்திற்கு தயாராகவேண்டும்.

பதுளை மற்றும் மொனராகலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பைக் கண்காணிக்கும் பொறுப்பை எமது தலைவர் என்னிடம் வழங்கியிருந்தார். நான் ஒவ்வொரு மாதமும் அந்த மாவட்டங்களுக்குச் செல்வேன்.

சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மூடப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கை மேலும் பல பிரச்னைகளை எதிர்கொள்ளும். விமான எரிபொருள் தட்டுப்பாடும் ஏற்படும். இலங்கை வழியாக விமானங்கள் பறக்க முடியாது. இதனால் சுற்றுலாத்துறை பாதிக்கப்படும்.

இதன் விளைவாக டொலர் பிரச்னை மோசமாகிவிடும். உணவுப் பற்றாக்குறையும் ஏற்படும்-என்றார்.

# பேசாலை விபத்தில் ஒருவர் படுகாயம்!

மன்னார், நவ. 21

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதி, பேசாலை சிறுத்தோப்பு பகுதியில் நேற்று சனிக்கிழமை மாலை 3 மணியளவில் ஓட்டோ மீது டிப்பர் வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த விபத்தில் ஓட்டோச் சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மன்னாரில் இருந்து வந்த ஓட்டோ மீது தலை மன்னார் பகுதியில் இருந்து வந்த டிப்பர் வாகனம் பேசாலை சிறுத்தோப்பு பகுதியில் வைத்து மோதியதில் ஓட்டோ பாரிய சேதமடைந்துள்ளதோடு, சாரதி பலத்த காயங்களுக்கு உள்ளாகினார். சம்பவ இடத்திற்கு வந்த பேசாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 725 தொற்றாளர்கள்...

னாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 55 ஆயிரத்து 929 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 15 ஆயிரத்து 468 பேர் சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 442 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 26 ஆயிரத்து 353 ஆக உயர்வடைந்துள்ளது. (இ)

## நிதியமைச்சர்...

பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இலங்கையின் சொத்துக்களை வேறு நாடுகளுக்கு மாற்றுவதற்கு அமெரிக்கப் பிரஜையான பஸில் ராஜபக்ஷவுக்கு உரிமை இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கை காரணமாக பஸில் ராஜபக்ஷவை அமைச்சர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சியில் உயிரிழந்த குமாரசாமி சிவகரன் (வயது-50) என்பவருக்கே கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்த குறித்த நபரின் பி.சி.ஆர் மாதிரிகள் யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.(அ)

## கொரோனாத்...

துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 108 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 22 மரணங்களில் 9 பெண்களும் 13 ஆண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ)

## பிரபாவின்...

மாவீரர் தினத்தை நினைவு கூரவோவேண்டாம் என மட்டக்களப்பிலும் நீதிமன்ற தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட இந்த தடை உத்தரவு நேற்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனுக்கு அவரின் அம்பிளாந்துறை இல்லத்தில் வைத்து கொக்கட்டிச்சோலை பொலிஸாரினால் கையளிக்கப்பட்டது.

இந்த தடை உத்தரவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், பட்டிப்பளை பிரதேசபை தவிசாளர் சீ.புஷ்பலிங்கம்,பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணாக்கியன், கோ. கருணாகரம், தமிழ்தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் த.சுரேஷ், முன்னாள் போராளிகளான நடராசா சுரேஷ், தம்பித்துரை கஜேந்திரன் ஆகிய ஏழு பெயர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. (அ)

ஈழநாடு
Eelanadu

# எதிரணி ஆர்ப்பாட்டத்தால் அரசை ஒருபோதும் கவிழ்க்கவே முடியாது

## மக்கள் எம் பக்கமே என்கிறார் ஜனாதிபதி



**கொழும்பு, நவ. 21**

**"எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் பலமிக்க எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவே முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்."**

**- இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷதெரிவித்தார்.**

நாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பில் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் நேற்று முன்தினம் ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தினர். இதன்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"அரசுக்கு எதிராக நாடெங்கும் மக்கள் கிளர்ந்தெழுந்துவிட்டார்கள் என்று சில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. ஆனால், உண்மையில் அரசுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழவில்லை. எதிர்க்கட்சியினர்தான் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்துள்ளனர் அவர்கள்தான் ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். அவர்களின் ஆதரவாளர்கள்தான் அரசுக்கு எதிராகக் கூச்சலிடுகின்றனர்.

இந்த எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களால் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலமுள்ள எமது அரசை ஒருபோதும் வீழ்த்தவோ - கவிழ்க்கவோ முடியாது. எம்மை ஆட்சியில் அமர்த்திய மக்கள் இப்போதும் எமது பக்கமே நிற்கின்றார்கள்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலின் போது நாட்டு மக்களுக்கு நாம் வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றவில்லை என்பது உண் மைதான். அந்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றி வரு கின்றோம். கொரோனாப் பெருந் தொற்றே இதற்குக் காரணம்.

இந்தத் தொற்றுக் காலத்தைப் பயன்படுத்தி எமது ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்று எதிர்க்கட்சியினர் முட்டாள்தனமாகச் சிந்திக்கின்றனர். ஆட்சியைத் தீர்மானிப்பது எதிர்க்கட்சியினர் அல்லர் மக்கள்தான் முடிவெடுப்பார்கள்" - என்றார். (இ)

# கார்த்திகை வாசம் மலர் முற்றம் நேற்று கிட்டு பூங்காவில் ஆரம்பம்





யாழ்ப்பாணம், நவ. 21

வடக்கு மாகாண மர நடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தாவர உற்பத்தியாளர்களுடன் இணைந்து நடத்தும் கார்த்திகை வாசம் மலர் முற்றம் நேற்று கிட்டு பூங்காவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இம்மலர் முற்றத்தை இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் கார்த்திகைப் பூச்சூடி ஆரம்பமான இத்திறப்பு நிகழ்ச்சியில் அவுஸ்திரேலிய இன்பத்தமிழ் வானொலியின் அனுசரணையுடன் "நடிகர் விவேக்கின் நற்பணியில் நாமும் நடுவோம் ஒரு மரம்" என்ற திட்டத்தின் கீழ் இலவசமாக மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்தியத் துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் மரக்கன்றுகளை வழங்கினார்.

நேற்று முதல் ஆரம்பமான மலர்ச்செடிகள், மரக்கன்றுகள் காட்சிப்படுத்தலும் விற்பனையும் எதிர்வரும் 26ஆம் திகதி வரை ஒவ்வொரு நாளும் காலை 8.30 மணி முதல் இரவு 7மணி வரை நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழ்வில் யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்திபன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் காலப்பகுதியில் தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தால் பாடசாலை மாணவர்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-03)

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 28 - 08 - 1959 |  | 17 - 11 - 2021 |

**திருமதி நாகேஸ்வரன் ஜெயமலர் (ஜெயா)**

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Attendorn ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நாகேஸ்வரன் ஜெயமலர் கடந்த (17.11.2021) புதன்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் பாரன் - தவமணி தம்பதியரின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்ற நாகேஸ்வரனின் அன்பு மனைவியும், சுஜீவன், காண்டீபன், தர்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், இளங்கோ, மதுயாசினி, ஹம்சலேஜினி (ஹாசினி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கிருத்திஸ், நந்திகா, அகன்யா, கனிசா, அகனாஸ் ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

**கிரியை**

Tuesday, 23 Nov 2021 2:00 PM - 4:00 PM
Friedhof Attendorn (Waldfriedhof) Friedensstraße 31,
57439 Attendorn, Germany

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சுந்தர் - தம்பி**
**Mobile : +16478014596**

தகவல்:
**குடும்பத்தினர்.**













இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.11.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-தேவதையைக் கண்டேன்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்



6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்



**இரவு**

7.00 மணி : SPOTLIGHT - தமிழ்த் தேசிய கட்சியின் தலைவர்-சிரேஸ்ட சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : செல்லாடுகளம்-வரும் முன் காப்போம்
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-கலையரசன்-அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்




DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

ஓம் சிவா

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரீஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு